செந்தமிழ்ச் செல்வி

உள்ளுறை

சிலம்பு-௫௧ | வள்ளுவர் ஆண்டு ௨௦௦௭ மார்கழி (Jan.' 77) [பரல் - ௫

'செந்தமிழ்ச் செல்வி'

கழகத்தின் இரு பெரு விழாக்கள்

சை. சி. நூற்பதிப்புக் கழகத்தின் சார்பில், மும்மொழிச் செம்மல் பல் துறைப் பேரறிஞர் மறைமலையடிகளார் நூற்றாண்டு விழாவும் சீரிய செந்தமிழ்த் திங்கள் இதழாகிய செந்தமிழ்ச் செல்வியின் பொன் விழாவும் முறையே 28, 29-1-1977 ஆம் நாள்களில் மயிலை இராசேசுவரி திருமண மண்டபத்தில் சிறப்புற நடைபெற, முன்னாள் உயர்நீதி மன்ற நடுவர் உயர்திரு எஸ். மகராசன் அவர்கள் தலைமையில் அமைந்துள்ள வரவேற்புக் குழு தக்க ஏற்பாடுகள் செய்து வருகின்றது. விழா நிகழ்ச்சிகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்பெறும்.

சை. சி. நூற்பதிப்புக் கழகத்தார்.

செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு ௫௧	திருவள்ளுவர் ஆண்டு ௨௦௦௮, மார்கழி சனவரி 1977	பரல் ௫

மறைமலையடிகள் நூற்றாண்டு விழா
செந்தமிழ்ச் செல்வி பொன்விழா
வேண்டுகோள் !

'திசையனைத்தின் பெருமையெலாம் தென்றிசையே வென்றேற'வும், 'அசைவில் செழுந்தமிழ் வழக்கே அயல் வழக்கின் துறை வெல்ல'வும் தமிழ்நாடு செய்த தவப்பயனாய் நாகை தந்த நன்மணியாய் இற்றைக்கு ஒருநூறு ஆண்டுகளுக்கு முன்னர் 1876 ஆம் ஆண்டு தோன்றிய செம்மல் மறைத்திரு மறைமலையடிகளார் ஆவர். பன்னெடுங் காலமாய்த் தன்னை மறந்து உறங்கிக் கிடந்த தமிழினத்தைத் தட்டியெழுப்பி வீறுகொள்ளச் செய்த பெருமை அடிகளாரையே சாரும்.



அருந்தமிழ் இலக்கண இலக்கியங்களைத் திருந்தக் கற்றிருந்ததோடு வடநூற் கடலை நிலைகண்டுணர்ந்தும் ஆங்கில மொழியையும் பாங்குறப் பயின்றும் பன்மொழி வல்லுநராகத் திகழ்ந்த அடிகளார் அவர்கள் மெய்ப்பொருளியல் முதல் கைத்தொழில்கள் ஈருகப் பல துறைகளிலும் ஒப்புயர்வற்ற கற்றறி

வும் பட்டறிவும் கொண்டு விளங்கினர்கள். தூய்மையான இறையன்பும், வடுவிலா நடுவுநிலைமையும், அசைவிலா நெஞ்சத் துணிவும், பகுத்தறி வுணர்வும், தொண்டு மனப்பான்மையும் கொண்டு பனிமலைபோல் தனிமலையாய் விளங்கிய அடிகளார் அவர்கள் தம் அஃகியகன்று உயரிய நுண்ணறிவால் தமிழ்நாட்டில் மொழி, சமயம், மற்றும் பல்வேறு வாழ்வியல் துறைகள் யாவற்றிலும் புத்தெழுச்சியையும் புது மரபையும் தோற்றுவித்துள்ளார்கள்.

அடிகளார்தம் பேச்சு ஊமையராய்க் கிடந்த தமிழரிடையே எத்தனையோ பேச்சாளர்களைத் தோற்றுவித்தது. பகைவரும் பாராட்டும் சிறப்பினதாய்த் தங்கக்கம்பியில் முத்துக் கோத்தது போன்ற அவர்தம் எழுத்து எழுத்தறியாப் பெருமக்களிடையே எண்ணற்ற எழுத்தாளர்களை உருவாக்கியது. அப்பெருமானின் வாழ்வியல் நடைமுறைகள் எத்தனையோ பேருக்கு வழிகாட்டியாய் விளங்கின.

சைவசித்தாந்த மகா சமாசம் என்னும் பேரவையைத் தொடங்கியும், பொதுநிலைக் கழகம் நிறுவியும் அறிவுக்கடல் வெளியிட்டும் இன்னோரன்ன பிற பணிகளை மேற்கொண்டும் அடிகளார் செய்த அருந்தொண்டுகள் அளப்பிலவாகும்.

அடிகளார் அவர்களைத் தன் தோற்றத்திற்கு ஏவுதற் கருத்தாவாகக் கொண்டு தோன்றி விளங்கும் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் அடிகளார்தம் அருநூல்களையெல்லாம் பொலிவாகப் பதிப்பித்துப் பரப்பி வருவதோடு, அவர்கள் வாழ்ந்து சிறப்பித்த பல்லாவரம் வளமனையை 'மறைமலையடிகள் கலைமன்றம்' என்னும் பெயரில் அடிகளார் நினைவு நிலையமாகவும் நூல்நிலையமாகவும் ஆக்கிச் சிறப்புற நடத்தி வருகின்றது. அன்றியும் அடிகளார் விரும்பிய வண்ணம் அவர்களது மணிமொழி நூல்நிலையத்தை 'மறைமலையடிகள் நூல்நிலையம்' என்னும் பெயரில் சென்னைமாநகரில் நிறுவி மிகப் பெரிய அளவில் வளர்த்துப் பெருந் தலைவர்களும் உலகப் பேரறிஞர்களும் வியந்து பாராட்டும் வண்ணம் சிறப்புற நடத்தி வருகின்றது. அடிகளார் வகுத்த நெறியையும் வளர்த்த உணர்வையும் தனக்கு ஊன்றுகோலாகவும் தூண்டுகோலாகவும் கொண்டு ஆயிரக்கணக்கான அரும்பெரும் நூல்களைத் தனிச்சிறப்பு வாய்ந்த முறையில் அச்சிட்டுப் பரப்புவதோடு மற்றும் பலப்பல பணிகளையும் செம்மையாகச் செய்து வருகின்றது.

'தேனும் பாலும் போலும் தூய தீந்தமிழ்ச் சொற்களால் உரைநடையும் செய்யுளுமாகிய இருவடிவிலும் பல்துறை தழுவி

ஐம்பதுக்கு மேற்பட்ட அருநூல் இயற்றி முதலிரு கழக நிலைக்குத் தமிழைப் புதுக்கி அதற்குப் புத்துயிரளித்து மாநிலத்தில் மக்கள் உள்ளவரை மறையாப் புகழ்பெற்ற' மறைத்திரு மறைமலையடிகளார் நூற்றாண்டு விழாவைப் பலவகையான சீர் சிறப்புகளுடன் கொண்டாட வேண்டியது தமிழ்மக்கள் ஒவ்வொருவருக்கும் தலையாய பெருங் கடமையாம்.

இனிச், செந்தமிழுக்கும் சிவநெறிக்கும் தொண்டு செய்வதே நோக்கமாகக் கொண்டு 1923ஆம் ஆண்டு, ஆசிரியர் தவத்திரு மறைமலையடிகளார் அவர்களின் மாணவரான திருவாளர் மணி திருநாவுக்கரசு முதலியார் அவர்களை ஆசிரியராக ஏற்றுக் கழக வெளியீடாகத் தொடங்கப்பட்ட இலக்கியத் திங்கள் இதழாம் 'செந்தமிழ்ச் செல்வி' இதுகாறும் 50 சிலம்புகள்—தொகுதிகள் வெளிவந்துள்ளன. 51ஆம் சிலம்பும் தொடர்ந்து வெளிவந்துகொண்டிருக்கின்றது. அவ் வகையில் இவ் வாண்டு செந்தமிழ்ச் செல்வியின் பொன்விழா ஆண்டாகும்.

கடந்த காலத்தில் செல்வி ஆற்றிய வரலாற்றுச் சிறப்புமிக்க நற்பணிகள் பலப்பல! பழைமையான இலக்கண இலக்கியங்கள், சிவநெறி மெய்ந்நூல்கள், தொன்ம(புராண)ங்கள், கல்வெட்டுகள் முதலியவற்றைப்பற்றித் தலையாய பேரறிஞர்கள் பலர் எழுதிய அரிய ஆராய்ச்சிக் கட்டுரைகளைத் தொடர்ந்து வெளியிட்டுள்ளது. மொழியியல், சொல்லாராய்ச்சி, மொழி பெயர்ப்பு, கலைச்சொல்லாக்கம் முதலிய புதுமையான துறைகளிலும் பல்வேறு கலைத் துறைகளிலும் ஈடுபட்டுத் தொண்டாற்றியுள்ளது. பேரறிஞர்கள், பெருந் தலைவர்கள் ஆகியோர் படங்களையும் வெளியிட்டுச் சிறப்பித்துள்ளது. இவை யாவற்றுக்கும் மேலாகச் சிவநெறிக்கோ, செந்தமிழுக்கோ, தமிழ்ப் பெருமக்களுக்கோ ஊறு நேரும் சூழல் அமையும்போதெல்லாம் செல்வி உறுதியும் தெளிவும் வாய்ந்த கொள்கைகளின் அடிப்படையில் உரத்து முழங்கியிருக்கின்றது.

கடந்த அரை நூற்றாண்டுக்கு மேலாகச் சிவநெறி செழிக்கவும் தனிச் செந்தமிழ் தழைக்கவும் அயராது அரும்பணி ஆற்றிவரும் செந்தமிழ்ச் செல்வியின் பொன்விழா தமிழ் வரலாற்றில் சிறப்பிடம் பெறத்தக்க பெருவிழாவாகும். தமிழ்ப் பெருமக்கள் ஒவ்வொருவரும் பங்குகொள்ள வேண்டிய புகழ் மிக்க திருவிழாவாகும்.

அடிகளின் நூற்றாண்டு விழா, செல்வியின் பொன்விழா ஆகிய இருபெரு விழாக்களையும் சிறப்புறக் கொண்டாடும் பொருட்டுக் கழகம் கடந்த ஓராண்டுக்கு முன்னமேயே திட்டமிட்டும், அறிக்கைகள் வேண்டுகோள்கள் முதலியன வெளியிட்

டுப் பரப்பியும் ஆவனசெய்து வருகின்றது. (உள்நாடு வெளி நாடுகளில் ஆங்காங்கு நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்டு வருகின்றது.) அடிகளார் அயன்மொழி விரவாத் தனிச் செந்தமிழ் வளர்க்கக் கால்கோள் செய்தது 1916 ஆம் ஆண்டாகும். அந் நிகழ்ச்சி இற்றைக்கு 60 ஆண்டுகளுக்கு முற்பட்டதாகலின் தனித்தமிழ் இயக்க மணிவிழா என்று கொள்வோமாயின் இவ் விழா முப்பெரும் விழா எனவும் கொள்ளலாம்.

மேலும் அடிகளாரின் வாழ்க்கை வளம் பெறவும் தொண்டுகள் சிறப்புறவும் பெரிதும் துணைநின்ற பெருமகனாகிய திருவரங்கனார் அவர்களின் இளவலும் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகமாகிய மாபெரு நிறுவனத்தைத் தொடக்க முதல் வளர்த்துத் தழையச் செய்த பெருமைக்குரியவரும் கழக ஆட்சிப் பொறுப்பாளருமான தாமரைச் செல்வர் வ. சுப்பையா அவர்கள் அடிகளார் அவர்களைக் கண்டு தொடர்பு கொண்டு தொண்டு புரியத் தொடங்கியது 1916 ஆம் ஆண்டேயாகும். அவ் வகையில் அதற்கும் இது மணிவிழா எனினும் பொருந்தும். இதுவும் ஒரு மகிழ்ச்சிக்குரியதாகும்.

விழாவிற்கு மேனாள் உயர்அறமன்ற நடுவர் உயர்திரு மகாராசன் அவர்களைத் தலைவராகக் கொண்ட குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது. சென்னை — மயிலை இராசேசுவரி திருமண மண்டபத்தில் 1977 சனவரி 28, 29 (வெள்ளி, சனி) ஆகிய நாட்களில் விழா எவ்வாற்றானும் சிறப்புற நடைபெறுவதற்குரிய எல்லா வகையான ஏற்பாடுகளும் தொடர்ந்து செய்யப்பட்டு வருகின்றன.

பேரறிஞர்கள், பெருந்தலைவர்கள், கலைஞர்பெருமக்கள் முதலியோர் வாழ்த்துகளையும் கருத்துகளையும் தாங்கிய, மறைமலையடிகள் நூற்றாண்டு விழாமலர், 'செந்தமிழ்ச் செல்வி பொன் விழா மலர்' என்னும் இருபெரு மலர்கள் மிகச் சிறந்த முறையில் உருவாக்கப் பெற்று வருகின்றன. அவை விழாவில் வெளியிடப் பெறும். மறைமலையடிகளாரின் மாணவரான தவத்திரு அழகரடிகள் எழுதியுள்ள 'மறைமலையடிகளார் வரலாற்று மாட்சி' என்னும் நூலும் விழாவில் வெளியிடப்பெற விருக்கிறது.

சென்னையிலும் வெளியூர்களிலுமுள்ள அருந்தமிழ் அன்பர்களும் அறிஞர் பெருமக்களும் மற்றும் யாவரும் தத்தம் வட்டாரங்களில் இவ் விழாவைக் கொண்டாடுவதோடு கழகச் சார்பில் சென்னையில் நடைபெறவிருக்கும் விழாவிற்கும் பெருந்திரளாக வருகைதந்து சிறப்பித்துப் பயனுறுமாறு வேண்டுகின்றோம்.

சிவஞானபோத ஆராய்ச்சி

[தவத்திரு அழகரடிகள்]

(சிலம்பு ௰௧, பரல் ௪, பக்கம் ௧௫௦இன் தொடர்ச்சி)

''மின் வண்ணத் திருச்சபையில் ஆடுகின்ற பதம்''

என்பது திருவருட்பா. ஆதலால், இவ்வொளி ஒலிகளை இறைவனால் உண்டாக்க முடிகிறது.

இக்கால விஞ்ஞானத்தில் (பருப்பொருள் விஞ்ஞானம்), ஒளி ஒலி இயக்கங்களெல்லாம் மின் வகையே. நாகரிக இல்லங்களில், ஒலியாகிய வானொலி முதலியனவும், ஒளியாகிய மின் விளக்கு முதலியனவும், இயக்கமாகிய மின் விசிறி முதலியனவும் மிளிர்கின்றன. மின் வண்ணமே நாகரிகமாகின்றது.

இறைவன் மின்னினும் நுட்பமான மின்; அப் பெருமானிடம் சொல்லரிய ஈர்ப்பாற்றல் (காந்தம்) விளங்குகிறது. அனைவரையும் அனைத்தையும் காந்தமாய் ஈர்க்கிறான்;

''ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை''

என்றார் மாணிக்கவாசகர்!

ஆட்கொள்ளப்பட்ட உயிர்களை அமிழ்த மயமாக்குதலும் அவன் செயலாய் இருக்கிறது. அமிழ்தை,

''எற்புத் தொளைதொறும் ஏற்றினன்''

என்பது திருவாசகம். ஆதலால் அப் பெருமான் ஒலி மூலம் ஒளியையும் உண்டாக்கி மின் ஆக விளங்குகிறான்.

இவ்வாறு ஒலியை ஒரு கருவியாகக் கொண்டு உலகத்தைத் தோற்றுவித்தலும் ஒடுக்குதலும் செய்கிறான். அப் பெருமானின் இன்பத்தை உயிர்கள் இருவகையிலும் துய்க்கின்றன! இன்பத்தை விளைவிப்பதற்கு இவ்வாறு வீணையொலி ஏதுவாய் இருக்கிறது; அஃதாவது, ஒலியின் மூலம் உலக நிலையையும், அருள் நிலையையும் இறைவன் உயிர்களுக்கு உண்டாக்கி நலந் தருகிறான்.

முத்தியிலும் இவ்வாறு ஒலியாய், அறியாமைப் பொருளாகிய மலம் பயன்படுகிறது.

'இத்தை விளைத்தல் மலம்''

என்னும் உண்மைவிளக்க வாக்கு இங்கே விளங்க்கூடும்.

இங்ஙனம் ஒலி கொண்டு உலக நிலையும் அருள் நிலையும் மக்களுக்கு உதவும் இறைவனது அருளாட்சியில், இறுதிப் பேருழியில் வீணை வாசித்தலாக அமைகிறது.

iv. மறை யொலி

இனி, ஒலி என்பவை எழுத்து, சொல், மறைமொழி என்னும் மூவகையாய்ப் பிரிவுபடுதலையும் ஒரு சிறிது எண்ணிக் கொள்ளவேண்டும். எழுத்து சொல்லாய், எழுத்தும் சொற் களும் மறைமொழி ஆற்றல் பெற்று மறைகளாய், இவ்வாறு ஒலி சிறக்கின்றது. படிக்கும்போது வெறும் எழுத்தாகவும் சொல்லாகவும் இருந்த ஒலி நிலை, அன்போடும் அருளோடும் அறத்தோடும் திருவருளைச் சேரும்போது, மறையாற்றல் பெற்று மறைமொழியாகின்றது; நூல் மறையிலக்கியமா கின்றது. இம் மறையொலி, இறைவனது மூல வீணை யொலியே! அது, ஐந்தொழிலும் செய்ய வல்லது; உலக நிலையையும் அறிவிக்கும்; அருள் நிலையையும் உணர்விக்கும். அத்தகைய மறை நிலையை உண்டு பண்ணுவதே நாத விந்துக்கள் சேர்ந்த சாதாக்கிய தத்துவம் என்பது!

"சதாசிவம் தத்துவம் முத்தமிழ் வேதம்"

என்னும் திருமூலர் திருமந்திரத்தில் 'சதாசிவம்' என்பது 'சாதாக்கிய தத்துவத்'தின் 'அதி தேவதை'; அச் சதாசிவமும், சாதாக்கிய தத்துவமும், 'ஓம்' என்னும் முத்தமிழையும், அம் முத்தமிழால் வேதத்தையும் பிறப்பிக்கும். வேதம் என்பது மறை; மறை என்பது, மறைவாயிருக்கும் நுண் பொருள்களை அதற்குரிய பக்குவர்க்கு அறிவிப்பது. அறம் பொருள் இன்பம் வீடு உரைக்கும் திருநான்மறை, வீடுபேற்று உயிர்களுக்கு வீட்டியல்பும், உலகநிலை உயிர்களுக்கு அறம் பொருள் இன்பங் களும் விளக்கும்; ஆண்டவன் அருளிச் செய்தது அது.

"வேதத்தொலி கொண்டு"

எனவும்,

"எம் இறை நல்வீணை வாசிக்குமே"

எனவும் வரும் திருமுறையை இங்கும் நினைவுகூர்க; இருவகை உயிர்களுக்கும் இறைவன் முறையே பொதுமறை யறிவிலும் சிறப்புமுறை யுணர்விலும் விளக்கங்கள் அருள் புரிகிறுன்.

v. முப்பாலும் நாற்பாலும்

திருக்குறள், உலகப் பொதுமறையாக விளங்குவதைக் கூர்த்து நோக்கினுல், உலக நிலையின் முப்பால் முறை இனிது

தெளிவாகும். அருள் நிலை வளர்ச்சிக்கு அம் முறைமை ஏதுவாய் விளங்குதலால், திருக்குறள், முப்பாலில் நாற்பால் உரைப்பதாய்த் திகழ்கிறது.

திருமுறைக ளெல்லாம் சிறப்பு மறைகள்; திருமுறைகளின் கொள்கைகளையும் திருக்குறள் மறையில் இலைமறை காயாய்க் காணலாம். வீடுபேற் றுயிர்களுக்கு வீட்டியல் உணர்த்தும் மறையாகவும், திருக்குறள் மறை தோற்றும்; பிறவியில் வரும் உலகியல் உயிர்களுக்கு முப்பால் விளக்கும் உலகப் பொதுமறையாகவும் அது திகழும்; பொது மறை, சிறப்பு மறை என்னும் இவை இரண்டும் இறைவனுடைய வீணை யொலிகளே!

திருக்குற ளாசிரியரிடத்திலும், திருமுறை ஆசிரியர்களிடத்திலும் 'சாதாக்கிய தத்துவம்' நன்கு விளங்கி இம் மறைகள் தோன்றின. இவற்றின் ஒலி ஒளிகள் (எழுத்தொலியும் அதன் வரி வடிவமும்) அவர்கள் உணர்வில் 'பரவிந்து' 'பரநாதங்க'ளாய் விளங்கின. இறை மின், அப் பெரியோர்களிடத்தில் காந்தமும் அமுதமுமாய் விளங்க, அவற்றில் அவர்கள் உள்ளம் துஞ்சியது. இறைவன் அம்மையப்பராய் அவர்கள் உள்ளமாகிய அருள் ஞான வெளியில் ஐந்தொழில் ஒலியாய் இயங்குகிறன். அம்மையின் தாள ஒலி, அப்பனின் திருநட ஒளியாய் விளங்குகிறது. நால்வர் பெருமக்கள் இவ்வுண்மைகளை நன்கு விளக்கினர்.

அதனுல், திருக்கோயில்களிலெல்லாம் அம்பலவாணர் திருமுன்னிலைக்கு எதிரில் நால்வர் பெருமக்களை நிறுவி வணங்குவது வழக்கமாய் இருக்கிறது. சமய குரவரைத் துதிப்பதனுல் சேக்கிழார் பெருமானையும் உடன் வைப்பதுண்டு; சற்று இடம் விட்டிருக்கக்கூடும். 'பொது மறை' ஆசிரியராகிய திருக்குறள் ஆசிரியரையும் அவர்களோடு இணைப்பது இன்றியமையாதது.

vi. வள்ளலர் விளக்கம்

வள்ளற் பெருமான், உலகின் ஒடுக்க நிலையில் தத்துவங்கள் ஒன்றேடொன்று நுட்பமாதலின் பெரிது பெரிதென்று உயர்த்தி, அம்பலவாணர் நிலையை, ஒரு 'திருவருட்பா'வில்,

"நான்முகர்கள் மிகப்பெரியர்; ஆங்கவரிற் பெரியர்
　　நாரணர்கள்; மற்றவர்கள் நாடின்மிகப் பெரியர்
வான்முகத்த உருத்திரர்கள்; மற்றவரிற் பெரியர்
　　மயேச்சுரர்கள்; சதாசிவர்கள் மற்றவரிற் பெரியர்;

மீன்முகத்த விந்ததனிற் பெரி, ததனில் நாதம்
மிகப்பெரிது; பரையதனில் மிகப்பெரியள்; அவளின்
ஆன்முகத்திற் பரம்பரந்தான் பெரிததனிற் பெரிதாய்
ஆடுகின்ற சேவடி யார் அறிவார்காண் தோழி''

என்று அருளிச் செய்வார்.

மாயையின் ஒலி ஒளி நிலைகள் இங்ஙனம் அருளொலி அருளொளிகளாய்ப் (பரநாதம், பரவிந்து) உயிருணர்வில் தோன்றுமாறு, இறைவன் பரையும் பரம்பரமுமாய் முதலில் முனைவான். அம்மையப்பராய் விளங்கும் கடவுள், தந்நிலையில் மிக நுட்பமாக ஐந்தொழில் இயற்றுவான்; வீடுபேற் றுயிர்களுக்கும் உலகியல் உயிர்களுக்கும் பொதுவில், (திருச்சிற்றம்பலப் பொதுவில்) ஆடுகின்ற சேவடியாய், எஞ்ஞான்றும் இயங்கிக் கொண்டே இருக்கிறான்; இறைவன் இயங்கிக்கொண் டிருப்பதனாலேதான் எல்லாம் அசைந்துகொண் டிருக்கின்றன.

"அவனன்றி ஓரணுவும் அசையாது''

என்பதை இங்கு எண்ணிப் பார்ப்பது நன்று. இவ் வுண்மைகளெல்லாம் இத் திருவருட்பாவில் இனிது தெளிவிக்கப்படுகின்றன.

அப் பெருமானது மிக நுண்ணிய அருள் ஒளி வெளிகளைப் பற்றியும், வள்ளற் பெருமான், ஒடுக்க முறையிலேயே வைத்து,

''மண்பூத முதற்சத்தி, வாலணுவின் அணுவாய்
மதித்தஅதன் உள்ளொளியாய்அவ்வொளிக்குள் ஒளியாய்,
எண்பூதத் தவ்வொளிக்குள் இலங்குவெளி யாய்அவ்
வியல்வெளிக்குள் ஒருவெளியாய் இருந்தவெளி நடுவே
பண்பூத நடம்புரியும் பதப்பெருமை எவரும்
பகுத்துணர முடியாதேல் பதமலர்என் தலைமேல்
நண்பூற வைத்தருளும் நடராசப் பெருமான்
நல்லசெயல் வல்லபம் ஆர் சொல்லுவார்காண் தோழி''

என்று அருளிச் செய்கிறார்.

சைவசித்தாந்தமும் சிவஞானபோதமும் கூறுகின்ற மிக நுண்ணிய இவ்வொடுக்கத் தோற்ற உண்மைகளையெல்லாம் வள்ளற்பெருமான் இனிது விளக்குகிறார். சமயங்கள் கடந்தது சித்தாந்தம்; வள்ளற் பெருமானும் சமயங்கள் கடந்தவர்!

சன்மார்க்கம்:

சைவ சித்தாந்தம் என்பதும், வேதாந்த சித்தாந்தம் என்பதும் இரண்டும் ஒன்றே. வேதாந்தத்தை வேறுபாடின்றிப்

பிரித்துக் கூறுவதானுல் அதனைச் 'சன்மார்க்க'மென்று சொல்லலாம். அதன் தெளிவாகிய ஞானப் பயனே 'சித்தாந்தம்' என்பது. 'வேதப் பயனும் சைவம்' என்பது பெரியோர் பொன் மொழி; 'வேத நெறி தழைத்தோங்க, மிகு சைவத் துறை விளங்க' என்றதும் காண்க. 'வேதம்' என்பது வேதாந்தத்தை உணர்த்தும்; அது நெறி; 'சைவம்' என்பது சித்தாந்தத்தை உணர்த்தும்; அது துறை; வேதாந்த மார்க்கம் அல்லது 'சன் மார்க்கம்' என்னும் நெறி, சித்தாந்தத் துறையை (அனுபவத்தை) அடைய உதவுகிறது! ஆதலால் உண்மையான வேதாந்த மார்க்கம் என்னும் சன்மார்க்கமே, சித்தாந்தப் பயனைத் தருகின்றது என்று துணியப்படும்.

வள்ளற் பெருமான் பயனை அடையத்தக்க ஒரு மார்க்கத்தை, ஒப்பற்ற ஞான மார்க்கத்தைச், 'சன்மார்க்கம்' என்று விளக்கும் பொருட்டே, 'என் மார்க்கம் சன்மார்க்கம்' என்ருர். 'வேதாந்த சிந்தாந்தம்' என்பது, ஒரே கொள்கை நிலையாய்ச், சமயங்களெல்லாவற்றையுங் கடந்ததாய் இருத்தலின், வள்ளலார் சமயங் கடந்தவரே என்று துணியலாம்.

'சித்தாந்தம்' என்னும் திளைப்பு நிலை, இறைவன் ஒலியிலிருந்து நுகர்வாய் எழுகிறது. மறையும் மறை முடிவும் வேதாந்தமாதலின், மறையொலியை வேதாந்தம் குறிக்கும்.

நாத ஒலி :

வெறும் நாத ஒலி 'ஓம்' என்னும் மறையொலியாகி, உலகம் அதுமுதல் விரிவடைகின்றது; வேதாந்தம் என்னும் சன்மார்க்கம், உலகத்தின் நுட்பங்களில் ஈடுபாடு கொள்கிறது. அதற்குமேல், சித்தாந்தமாய்த் திளைப்புத் தொடங்குகிறது.

ஒடுக்க முறையில், உலகமெல்லாம் நாத ஒலியாய் ஒடுங்கி, உயிருணர்விற் பர நாத ஒலியாய்ச் சிறப்புப் பெறும்போது, ஆண்டவனிடம் அடங்கி ஆண்டவனது சிவஞான அருள் அதனிற் பதிகிறது; பதிந்து, தோற்ற முறையில் அவ்வொலி மறையொலியாய் மாண்புறுகிறது; சதாசிவரால் சாதாக்கியமும், 'ஓம்' என்னும் அகர உகர மகரமாகிய முத்தமிழும், அது விரிந்த வேதமும், அந் நிலையில் இனிது விளங்கும்; இங்கே 'சாதாக்கிய தத்துவம்' அதன் அதிதேவராகிய சதாசிவம் என்னும் பெயரிற் கூறப்பட்டது.

முதற் கடவுளின் சிவஞானம் இவ்வாறு உயிருணர்விற் 'பர நாத ஒலி' வண்ணமாகி, அனைத்துந் தோற்றமுறுகின்றன. இதனைச் சிவம் ஒலி வாசித்தலாகக் கூறுப.

அவ் வொலி ஒடுக்கவும் வல்லது, உருவாக்கவும் வல்லதா யிருக்கிறது. இரண்டையும் செய்வது, இறைவன் அருள் ஞானமே; அது ஒலி வண்ணமாய்ப், பொதுவாய், ஐவகைத் தொழிலாய், உயிர்களின் அருள் வெளியில் பாய்ந்து பதிந்து நிகழ்கிறது; எல்லாம் செய்கிறது!

'அருள் வெளி' என்பது எல்லார்க்கும் பொதுவாதலின், எல்லாவற்றிற்கும் ஒரே ஒலியாய்ப், பின்பு வெளி யொளியாகி, அம்பலவாணராய், உயிர்களின் திருச்சிற்றம்பலத்தில் நடை பெறுகிறது.

'ஒலி' என்னும்போது அருவமும், 'ஓம்' என்னும்போது அருவுருவமும், 'அம்மை அம்பலவாணர்' என்னும்போது உருவமுமாக, உருவம் முதலிய எல்லாம் கடந்த சிவமும் சத்தி யும் தோற்றமுறுகின்றன.

ஒரே ஒலியாகத்தான் அம்மை அப்பராகிய சிவம் வீணை வாசிக்கிறது. வீணை என்பது இசைக் கருவிகளில் மிக மென்மை யானது. அத்தகைய மெல்லிய இசை யொலியால் இறைவன் ஐந்தொழில் நாடகமும் நடத்துகிறுன்; ஒடுக்க முறையிலும் ஐந்தொழில் நிகழ்கிறது. அழித்து மறைத்து அருளல், ஐந் தொழில் ஒடுக்க முறை; மீண்டும் படைத்துக் காப்பதாகத் தோற்றமுறுவது தோற்றுமுறையாகும்.

எல்லாம் பொதுவில்:

பொதுவில் நிகழும் ஒரே ஒலி இங்ஙனம் ஒடுக்கம் முதலி யவற்றிற்கும் தோற்றத்துக்கும் காரணமாய் நிகழ்வதைச் சில எடுத்துக்காட்டுகளாலும் அறியலாம்.

மின் எல்லார்க்கும் ஒரே வகையாகத் தன் ஆற்றலை வெளி யிட்டாலும், இன்ப துன்பங்கள், பயன்படுத்துவோரைப் பொறுத் துள்ளன.

அடுப்பில் எரி ஊட்டிச் சமைக்கும்போது நெருப்பு ஒரே வகையாகத்தான் எரிகிறது; ஆனல், 'பீர்க்கு' 'புடல்' முதலிய காய்கள் வெந்து சுருங்குகின்றன. 'அரிசி' முதலியவை மலர்ந்து பெருகுகின்றன.

சூரியன் ஒரே வகையாக ஒளி தருகிருன். ஆயினும், தாமரை மலர்கிறது; குமுதம் குவிகிறது.

அமிழ்தமாகிய திங்கள் ஒரே வகையாகத்தான் ஒளி தருகி றது; என்ருலும் நோய் கொண்டவர்களைத் துன்புறுத்துகிறது; மற்றவர்களை இன்புறுத்துகிறது.

‘வேள்வித் தீ’ என்பது பொதுவில் வளர்ந்து, மின் ஆற்றலும் சூரிய காந்தமும் திங்கள் அமிழ்தமும், ஒருங்கே உடையதாய் முத்தீயாய்ச் செழித்தோங்கி, ஒடுக்கவேண்டியவற்றை ஒடுக்கியும் பெருக்கவேண்டியவற்றை மலரச் செய்தும் பல்வேறு வகையிற் பலப்பல செயல்களாய் விரிந்து உலகத்துக்கு நலம் விளைக்கிறது. இறைவன் அருட்பொழிவும் ஒலி மூலம் பொதுவாகப் பொழிந்து ஐந்தொழில்களையும் பலவேறு வகையாய் நிகழ்த்துகிறது.

ஒரு தீயை மூன்று தீயாய்ச் செய்தலே ‘ஓமம் செய்தல்’ எனவும், ‘வேள்வி செய்தல்’ எனவும், சடங்குகளாய்க் கூறப்படுகின்றன. ‘ஓம்’ முதலிய மறைமொழிகளால் அங்ஙனமெல்லாம் வேள்வி மாற்றி வளர்க்கப்படுகிறது.

திருமணக் காலத்தில் மங்கல நாண் சூட்டுவதற்கு முன் ஒரு வேள்வியும், சூட்டிய பின் ஒரு வேள்வியும் வளர்க்கப்படுகின்றன. முதல் வேள்வி என்பது, தீயில் மின்னலை உண்டாக்கி, அதிலிருந்து காந்த ஆற்றலும் அமிழ்த ஆற்றலுமாக முத்தீயாய் மாற்றுதல் நிகழ்கிறது. மங்கல நாண் சூட்டிய பின் மணமக்கள் இருவரும் செய்யும் வேள்வி, முத்தீ வேள்வியாகவே இருக்கிறது; அது முதல் அன்றாடம் செய்யும் வழிபாட்டு வேள்விக்கு முதல் நாள் வேள்வியாய் அது செய்யப்படுகிறது; தொடர்ந்து செய்வதற்கும் எடுத்து வைக்கப்படுகிறது! மணமக்களின் இல்வாழ்க்கையில், அகத்தில் அக வழிபாடாக இம் முத் தீ வேள்வியை ஆற்றுவதற்காகவே. புறத்திலும் இவ்வாறு வளர்க்கப்படுகிறது; மணமக்கள் கவனித்தால் உண்டு.

‘இல்வாழ்க்கை’ என்னும் இல்லறத்துக்கு இவ் வேள்வி முதன்மையானது. அவர்கள் செய்யும் ‘தென் புலத்தார், தெய்வம், விருந்து, ஒக்கல், தான்’ என்னும் ஐவகை இல்லற வேள்விகளில், இம் முத் தீ வேள்வி, தெய்வம் பெருக்குதலைச் சேர்ந்தது. இல்லறம் என்பது, இவ்வாற்றால், ‘தவமிருத்தல்’ ‘ஞானம் செய்தல்’ என்னும் பயிற்சி அறங்களைச் செய்தலாகும்.

திருக்குறள் மறை கூறும் இல்லறவியலின் அதிகாரங்களெல்லாம், வெறும் குணங்களல்ல; தவப் பயிற்சியை மாட்சி செய்து கொள்வதற்கு, இக் குணங்கள் தேவை; எல்லாம், ஞான நிலையிற் கொண்டுபோய்விடும். திருக்குறள் மறையில் வரும் ‘ஞானப்பகுதி’ இல்லறத்தார்க்கே இங்ஙனம் உரியதாகின்றது. ஏனைப் பொருட்பால் இன்பப்பால் அதிகாரங்களும், இல்லறத்தார் நெறிகளே!

ஒலியால் மற்றவை :

முத் தீ வேள்வி இங்ஙனமெல்லாம் உலக மக்களுக்கு வாழ்வளித்து வருகிறது. அத்தகைய தெய்வ வேள்வி, மந்திர ஒலிகளால் மாண்புறுதலை அறிகிறோம். ஆதலால், அருள் பதிந்த பரநாத ஒலி மூலம் வருகின்ற ஞான வீணையொலியால், 'நாத விந்து கலைகளை' இவ்வாறு இறைவன் ஐந்தொழில் முறையாக உருவாக்குகிறான். பின்பு ஒடுக்கவும் நேர்கிறது.

எல்லாப் பொருள்களிலும் ஒலி மிக நுட்பமானது. ஆதலால், ஒலியைப் பற்றிக்கொண்டு, ஞானம், மென்மையான வீணையாகப் பொதுவில் நிகழ்கிறது. ஆதலால், எல்லாம் வல்ல அம்மை அப்பராகிய இறைவன், வீணை வாசித்து உயிர்களைப் பிறவியில் தோற்றுவிக்கவும், சிலரைத் தன் இன்பத்தில் அடக்கி விடுதலை தரவும் இவ்வாறு ஒலியைப் பயன்படுத்துகிறான்.

ஒலியால் ஒளியையும் (வடிவம்), இரண்டினாலும் 'ஓம்' முதலிய மறைமொழிகளையும் செய்தலால் இயல் இசை நாடகம் என்னும் முத்தமிழாய்த் தமிழ் பிரிகிறது. இயல் என்பது இறைவன் ஞானம்; இசை என்பது ஒலியின் மூலம் அது வெளிப்படுதல்; நாடகம் என்பது செய்கையின் மூலம் அவற்றால் ஐந்தொழில் நிகழ்தல்; மூவகைப்பட்ட இப் பிரிவுகள், உலக மொழிகளில் தமிழ் ஒன்றுக்கே உள்ளன; இதனால், தமிழ், 'இயற்கைமொழி' என்பதும், 'ஞான மொழி' என்பதும், 'கடவுள் மொழி' என்பதும் பெறப்பட்டு, முத்தமிழ் வேதமாய் முத்தீ வேள்வி ஆற்றுதலாய், மறைகள் இறைவனிடமிருந்தே தோன்றின வென்று பெரியோர் கருதினர்.

வேறுபாடு கன்மத்தால் :

இங்கு ஒரு நுட்பத்தை நாம் கருதிக்கொள்ள வேண்டும்; மின்னலோ, கதிரவனோ. நிலவோ, எல்லா உயிர்களுக்கும், எல்லா மக்களுக்கும், பொதுவாகப் பொழிந்தாலும், அவை பலப்பல வேறுபாடுகளாகப் பயன்படுதலுக்குக் காரணம், ஏதாய் இருக்க முடியும்? எண்ணிப் பார்த்தால், அவரவர் இயல்பும் செயலுமே வேறுபாடுகளுக்குக் காரணமாம் என்று தோற்றும்.

ஓர் ஆசிரியர், தம் வகுப்பு மாணவர்களுக்கு ஒரே வகையான ஒலியினால் பொதுவாகக் கற்பித்தாலும், மாணவர்களின் இயல்பும் செய்கையுங் காரணமாக, ஆசிரியரின் பொது முயற்சி, பலப்பல வகைகளில் வெவ்வேறு வகையாய் மாணவர்களிடம் ஏறுகிறது; மாணவர்கள் ஒரே வகையாய் உணர்வதில்லை. அது

போல, இறைவன் ஒரே வகையாய் ஒலியின் மூலம் ஞானத்தைப் பொதுவாகப் பொழிந்தாலும், அவரவர் இயல்பும் அவ்வியல்புக் கேற்ற முன் பின் கன்மங்களும், பயனை நுகர்வதில் பல வேறு வகையான வேறுபாடுகளைத் தோற்றுவிக்கின்றன.

ஒலி மூலம் ஞானம் பொழியும் 'சிவசக்தி'யின் அருள் இங்ஙனம் அவரவர் கன்மத்தால் வேறுபடுதலால், 'உன்னால் ஒன்றும் குறைவில்லை' என்னும் திருமுறை வாக்கு எழுந்தது. இதனால் கன்ம மலமும், அதற்குக் காரணமான அறியாமை ஆணவ இருளும், இவ் விரண்டுக்கும் தீர்வு செய்ய ஒளி விளக்குப் போன்ற மாயை மலமும், இயற்கையில் இருப்பது தெரிகின்றது. இவற்றுள், மாயை என்பதை இறையருள் தேர்ந்து, பயன்படுமென்று சுட்டி யுணர்ந்து, உயிர்களின் பொருட்டுக் கருணையால் தொழில் புரிய நேர்ந்தது; உலகமும், உடல் கருவி பொருள்களும் உண்டாயின.

'சடப்'பொருவில் தொழில் :

இத்தகைய மாயை, இயல்பில் ஒரே பொருள்; 'நித்தமாய் அருவாய் ஏக நிலையதாய் உலகத்துக்கு ஓர் வித்துமாய், அசித்தாய்' (சித்தியார் சுபக்கம் 143) அது விளங்குகிறது. 'ஏக நிலையதாய்' என்று அது குறிக்கப்படுதல் காண்க.

'அசித்'தாகிய அப்பொருள், உலகத்திற்கு ஒரு வித்துமாகிப் பின் விளைவெய்துகின்றது. இங்ஙனம் உலகம் பல உறுப்புக் களாய் மாயையிலிருந்து காரியப்பட்டு, 'அசித்து' என்னும் ஒரே இனமாகிய சடப்பொருளாய் இருத்தலின், ஒரு காலத்தில் உலக விரிவுகள் அனைத்தும், ஒருங்கே தன் மூலமாகிய மாயையில் ஒடுங்கி விடுகிறது என்று மெய்கண்டார் தெரிவித்தார். மாயை சடமாயிருப்பதனால் அதனிடத்தில் தொழில் நிகழ்கிறது. உலக விரிவு, உறுப்புக்களாய்ப் பலவாய் இருப்பதனால், மூலத்தில் ஒடுங்க நேர்கிறது; அவையெல்லாம் சடமென்னும் ஓரினமாக இருத்தலால், ஒருங்கே ஒடுங்கவும் நேர்கிறது.

ஒடுங்கிய உலக விரிவு, மீண்டும் தோன்றுதலுக்கும் ஏதாவது காரணம் இருக்கத்தானே வேண்டும்? ஆண்டவன் திருவருள் எல்லா நிலையிலும் பொதுவாகவே அமைந்தாலும், உயிரினங்களின் கன்மம் காரணமாகப் பயன் வேறுபடுதலால், உயிர்களிடத்தில் வெவ்வேருக அங்ஙனங் கன்மங்கள் அமைவ தற்கு உயிர்களின் இயல்புகளில் அறியாமை சேர்ந்திருப்பதே, காரணம் என்பதும், தானே பெறப்படும். உயிர்களின் இயல் புகள் சிற்றியல்புகளாயிருத்தலின் அறியாமை மலம் அவற்றை

மட்டும் பற்றிக் கொண்டது; பேரியல்புடைய பெருமானைப் பற்ற இயலவில்லை அந்த அறியாமை இருளையுங் குறிக்க ஒரு பெயர் வேண்டுமன்றோ?

இறைவன் திருவருளே எல்லாச் சிறப்புகளுக்கும் காரண மாயிருக்கத், தாமே முன் வந்து செய்வதுபோல் உயிர்கள் அலட்டிக்கொள்கின்றன. ஆளுதலியல்பு (ஆள் —ஆண்) அவ்வா றிருத்தலால் 'ஆணவம்' என்னும் பெயர் அதற்குப் பொருந்தும். உயிர்களை அது 'அணு' போலவுங் குறைத்து விட்டது. அத்தகைய 'அறியாமை யாணவம்', ஆற்றல் மடங் கியே ஆகவேண்டும்; அது, மேலும் குறையவேண்டுவதற் காகவே மீளவும் தோற்றம் உண்டாகிறது.

தொன்மையும் இயற்கையும் :

ஆணவமலம் தொன்மையே இயைந்தது என்று முடிவு செய்வதே பொருத்தம்; ஏனென்றால், எல்லா இரக்கமும் ஒருங் குடைய இறைவன், அறியாமையாகிய அதனை அறிவுடைய உயிர்களுக்கு இடையே சேர்க்கமாட்டான். 'இருபா இருபஃது' என்னும் மெய்கண்ட நூலில், நான்காம் செய்யுளில், இக் கருத்துப் புலப்படுத்தப்படுகிறது. மலங்கள் தொன்மையாகவே உயிர்களோடு சேர்ந்துள்ளன என்பது அதன் முடிபு.

தொன்மை வேறு இயற்கை வேறு; இயற்கை என்பது எப்போதும் நீங்காதது; ஒரே தன்மையாய் இருக்கும். தொன்மை என்பது அப்படியன்று; நீங்காதாயினும் தன்மை வேறுபடும்.

> "எம்மை வந்தணையத்,தானே மாட்டாது,யானே செய்கிலன்,
> நீயரோ செய்யாய் நின்மலன் ஆயிட்டு;
> இயல்பெனிற் போகாது;"

என்பது சித்தியார்.

'இயல்பெனில் போகாது' என்றால், பந்தம் வந்தவாறு, செம்புக்குக் களிம்புபோலக் காரணமின்றி அனாதியே உள்ள தாம்;......மும்மலங்களும் ஆன்மாவுக்கு அனாதியாம்; (இறைவன் தன்) சக்தியாலே கூட்டியும் பிரித்தும் செய்வன் என்பது கருத்து' என அதன் உரையாசிரியர் முடிவு கூறுவார். இதனால் இயற்கை என்பது வேறு, தொன்மை என்பது வேறு, என்று அறிந்து கொள்ளலாம்.

ஆண்டவன் அருள் அந்த அறியாமையின் தீர்வுக்கு வழி கோலுகிறது ; உயிர்களிடம் அறியாமை இருப்பதை அனைவரும்

அறிவர்; அது நீங்கி அறிவு பெறுவதையும் மக்கள் அறிந்திருக்கின்றனர்.

ஆணவத்தின் தன்மைகள் :

வேறுபட வேண்டியவைகளில் வேறுபடாமை, வேறுபடக் கூடாததில் பிடிவாதங் கொள்ளுதல், பேராசையின் அழுத்தம், தீய நோக்கத்தில் கோபங்கொண்டு அதனை உள்ளத்திலேயே வைத்துக் கறுவிக்கொண்டிருத்தல், பதறிக் கொலை செய்துவிடுதலும், செய்யக் கருதுதலும், செய்யாததைச் செய்துவிட்டுப் பின்பு வருந்துதல், செருக்குறுதல், புறம் நகைத்தல் என்பன அறியாமையின் அடையாளங்கள்; இவை யாரிடம் இருக்கின்றனவோ அவரிடம் அறியாமை யாகிய ஆணவ மலம் இருக்கிறதென்று தெரிந்துகொள்ளலாம்.

இத் தன்மைகளைச், சிவத்தின் தெய்வ குணங்களைக் கொண்டுதான் நீக்கிக் கொள்ளமுடியும். அப்படிக் கொள்வது எளிதாகவா இருக்கிறது! இறைவன் திருவுள்ளம் இருந்தால் அவனுடைய தெய்வ இயல்புகள் நம்மிடம் படியும்.

சிவத்தின் தன்மைகள் :

ஆணவத்தின் தன்மைகள் எட்டென்று சொல்லப்படும்; சிவத்தையும் 'எண் குணன்' என்று சொல்லுவது மரபு. "எண் குணம் செய்த ஈசனே" என்பார் மாணிக்கவாசகர். "எண் குணன் தாளை வணங்காத் தலை" என்பது திருக்குறட் பொது மறை. உரையாசிரியர் பரிமேலழகர் அவற்றைத், 'தன் வயத்தனுதல், தூய உடம்பினனுதல், இயற்கை யுணர்வினனுதல், முற்றும் உணர்தல், இயல்பாகவே பாசங்களின் நீங்குதல், பேரருளுடைமை, முடிவி லாற்றலுடைமை, வரம்பில் இன்பமுடைமை' என்று விரித்துக் கூறுவார்.

இறைவனுடைய இக் குணங்கள் எட்டும், தவம் முதிர்ந்து அதன் பயனுய் விளங்கும் ஞானம் ஒருவரிடம் அமைந்திருந்தால், அந்த ஞானத்தின் அடையாளமாய் அவரிடம் விளங்கும். இந்த ஞான இயல்புகள் கொண்டு, ஆணவத்தின் எட்டுத் தன்மைகளும் வாழ்க்கையிற் பதியாதபடி காத்துக்கொள்ள வேண்டும். மாயைக்கு ஏழு தன்மைகளும் கன்மத்துக்கு ஆறு குணங்களும் அருணந்திசிவம் வெவ்வேருகக் கூறுவார். இவை அனைத்தும் ஒன்றில் ஒன்ருக அடங்கி ஆணவத் தன்மைகளில் இணைந்துவிடும். அந்நிலையில், தக்க பக்குவர்க்கு, ஆணவத்தின் தன்மைகள் இறைவனியல்புகளில் அடங்கும். ஆகையால், இறைவனியல்புகளை ஒவ்வொருவரும், அப் பெருமானைச் சேர்ந்தும் இணங்கியும் அடைதல் இன்றியமையாதது.

குணங் கடந்தவன் :

இங்கே கூறப்படும் எண் குணங்கள் 'குண தத்துவத்தைச்' சேர்ந்தவை யல்ல. அதனுல் இறைவனைக் குணமற்றவன் (நிர்க்குணன்) என்று கூறுப; குணதத்துவத்தைச் சேர்ந்தவை, 'சாத்துவிகம்' 'இராசசம்' 'தாமசம்' இவை வேறு, இறைவனுடைய எண் குணங்கள் வேறு; எண் குணங்கள் என்பன இறைவனுக்கு இயல்பானவை; எண் குணங்களுக்குக் கூறப்படும் பெயர்களே, இறைவன் குணத் தத்துவத் தன்மைகள் அல்லாதவன்; இறைவன் 'சாத்துவிக இராசச தாமசங்'ளாகிய முக்குணங்களும் அற்றவன் என்பதைக் குறித்துவிடும்.

சாத்துவிக முதலியவை மாயையின் தன்மைகள்; இவை ஆணவ மலத்தின் தன்மைகளை முற்றும் தீர்க்கமாட்டா; இறைவனுடைய எண் குணங்கள் தீர்த்துவிடும். எண் குணங்கள், ஆணவ மலத்தின் தன்மைகளை முற்றிலும் எதிர்க்கும் பேராற்றலுடையவை;

அறியாமை தருகின்ற இவ் ஆணவ மலம் தன்மை மாறியே ஆகவேண்டுமாதலால், இறைவன் உலக முதலியவற்றை மீளவும் தோற்றுவிக்கவேண்டி யிருக்கிறது. உயிர்களின் ஒரு பிறவியிலேயே அறியாமை தீர்வதில்லை; இறந்துபோகும் போதும் அறியாமைகள் இருத்தலை நாம் பார்க்கிறோம். இறைவனுக்கோ, அறியாமையை முற்றும் தீர்த்து, உயிர்களை ஒளியில் நிறுத்துதல் நோக்கமா யிருக்கிறது. வாழ்க்கை முறைகளைக் கொண்டு இதனைத் தெளிவாக அறிந்து கொள்ளலாம்.

இறைவன் நோக்கம் :

இறைவன் பணி, ஒரே பிறவியில் நிறைவேருதபடி அறியாமையால் உயிர்கள் மேன்மேல் கன்மங்களைச் செய்தும், இணைத்துத் தரும் உலகம் உடல் முதலிய மாயைகளிற் பற்று வைத்துச் சிற்றின்பம் நுகர்ந்துகொண்டும், மாய்ந்து போகின்றன. வாழ்க்கையில் இச் சிற்றின்பம் உடையவர்களையும், இதனை நீங்கி யிருப்பவர்களையும், சிறிது சிறிதாக நீங்கி வருபவர்களையும், நாம் பார்க்கிறோம். முன் பின் வினைகளின் காரணங்களால், உயிர்களுக்கு இந்நிலையிற் பற்பல பிறவிகள் மீண்டும் மீண்டும் உண்டாகின்றன. இவற்றிலிருந்து இறைவன் நோக்கம் இன்னதென்பதை இயல்பாக அறிந்துகொள்ளலாம்.

பெருமான் நோக்கம் நிறைவேறும்படி சான்றோர்கள் வாழ்கிறார்கள். அவர்களுக்கும் மற்றவர்களுக்கும் ஏற்ற அருள் நலங்களை உண்டாக்கும்பொருட்டும் அருளுரைகளைத் தரும் பொருட்டும் திருஞானசம்பந்தர் முதலிய சமய குரவர்கள் தோன்றினர்கள். அவர்கள் உலகுக்கு வழங்கிய திருமுறைகள்

அவர்கள் காலத்துக்குப் பின்பும் பயன்பட்டு வருகின்றன; அவர்கள் காட்டிய வழியே மக்கள் நடந்துவந்தால், விரைவில் ஈடேறலாம்.

'முதல்வன் பாதமே பற்று நின்றாரைப் பற்று பாவம்'; இது திருமுறைகளின் ஒரே கொள்கை; முதல்வன் பாதத்தைப் பற்று தல் என்பது எல்லாம் வல்ல முழுமுதற் கடவுள் வழிபாட்டையே குறிக்கும்; எந்நிலையிலும் சிறு தேவதைகளைக் கடவுளாக நினைந்து வழிபடுதலை நீக்கும்.

'முதல்வன் வழிபா'டென்பது முதல்வன் வழியிற் படுதலாத லின், அவன் நோக்கப்படியே பின்பற்றி யொழுகுதல் இன்றி யமையாதது; உயிர்களின் முன்னேற்றத்துக்காகவே இறைவன் பணி செய்பவனாயிருத்தலின், மக்களும், அவன் பணியில் அவனுக்குத் துணையாக வாழ்க்கை செய்தல் வேண்டும்; அங்ஙனம் நடப்போர், தமக்கென எதுவும் வேண்டிக் கொள்ளார். அப் பெருமானுக்குத் துணை நிற்கும் முறையில் அவன் எண் குணங்களில் அவர்கள் இயன்ற அளவு பெற்று வாழ்வர்.

அறியாமை மலம் முற்றிலும் தீரும்படி இறைவன் நோக் கத்துக்கு இணங்க உயிர்கள் வாழ்வதானால், மீளவும் அவ்வுயிர் களுக்குப் பிறவி உண்டாகாது. மேன்மேலும் கன்மங்களைச் செய்யாமல், மாயையின் விரிவான உலக முதலியவற்றில் முற்றிலும் பற்று நீங்கி, எல்லாம் சிவசத்தி எழில்களே என்று உணர்ந்து அச் சத்தியின்மேல் உருக்கம் உடையவர்களாய், உண்மையாளர்களாய் அறவாழி அந்தணராய் விளங்கு வார்கள். அவர்கள் பணி பற்றற்ற இறைபணியா யிருக்கும். 'இறைபணி' என்பது இறைவனுக்குமட்டும் செய்யும் பணி யன்று; இறைவன் உயிர்களின் முன்னேற்றத்துக்குச் செய்து வரும் பணிகளைத் தாமும் முக்கியமாய்ச் செய்தல்.

உயிர்களிற் பெரும்பாலன அவ்வாறு இல்லாமையாலும், எண்ணற்ற உயிர்கள் புதிய பிறவிகளில் வந்துகொண்டிருத்த லாலும், உலகம் முதலியன மீளவும் உண்டாக வேண்டி யிருக் கின்றன.

ஒடுக்குங் கடவுள்:

அப்படி உண்டாகுங் காலத்தில், ஒடுங்கும்போது அவை எங்கே போய் ஒடுங்கினவோ அங்கிருந்தே மீளவும் உண்டாக வேண்டுமேயன்றி, வேறு வழி என்ன இருக்கிறது! எல்லா விரிவுகளும் மாயை மலத்தில், ஒரு பேரறிவுப் பொருளால் ஒடுங்குகின்றன என்பதை நாம் அறிவோம். மூலத்தில் அங்ஙனம் ஒடுங்கவைத்தவன் கடவுள் என்றால், அக் கடவு

னாலேயே அம் மூலத்திலிருந்து உலகம் மீண்டும் விரிய வேண்டியிருக்கிறது. 'மாயையில் ஒடுக்கம்' என்பதை இதனால் 'இறைவனில் ஒடுக்கம்' என்று அறிஞர் கூறுவர்; அப் பெருமானிடத்திலிருந்தே மீளவும் தோன்றுகின்றது என்பர். மாயை முதற் காரணமாயினும், நிமித்த காரணனாகிய இறைவன், இதனால், 'உலகங்கள் தன்னிடமிருந்தே தோற்றுகின்றன' என்று பெயர் பெறுகிறான்.

இனி ஓர் உயிரை மலம் நீங்கிய சான்றோனாக ஆக்குவதற்குப் பயன்பட்ட உலகமே, மற்ற உயிர்களையும் அங்ஙனம் சான்றோராக்குவதற்குப் பயன்பட வேண்டியுள்ளது. உலகம், உடல், கருவி, புழங்கு பொருள்களெல்லாம் முன்போலவே விரியவேண்டியுள்ளன; வேறுதற்கு வாய்ப்பில்லை. ஆதலால், ஒடுங்கியது எப்படியோ, எதுவோ, அப்படியே அது மீளவும் தோன்றுகின்றது என்ப.

இயற்கை யொழுங்கு :

மேலும், 'சடம்' என்னும் அறியாமைப் பொருள்களிலும், சடம் போன்ற உயிர்களிலும், முதலில் ஓர் ஒழுங்கை அமைத்து விட்டால், எப்போதும் அவை அவ்வாறே இயங்கிவரும். இவ்வுண்மையை இயற்கையில் நாம் எப்போதும் காணலாம்.

நெல் விதையிலிருந்து நெல்லே விளைகிறது. நமக்கு அறிவு வந்த காலம் முதல் என்றென்றும் இப்படியே நிகழ்ந்து வருதலைப் பார்க்கிறோம். அவரையிலிருந்து அவரையும், சுரையிலிருந்து சுரையும், மரங்களின் விதைகளிலிருந்து மரங்களும், கொடிகளிலிருந்து கொடிகளும், விலங்குகளிலிருந்து விலங்குகளும், மனிதர்களிலிருந்து மனிதர்களும் இவ்வாறே நாளும் தோற்றமுற்று வருகின்றன. தவறுகள் தப்பித் தோன்றுவன: பெரும்பான்மை அப்படி நேர்வதில்லை. இவற்றில் மாறுதல்கள் நேர்ந்தால் நாம் எதனிலும் நம்பிச் செயல்பட முடியாது; வாழ்க்கைச் செய்கையாக நாகரிகம் அரும்பவும் வழியில்லை.

ஒரு வீடு கட்டினால் அது வீடாக முடிவதற்குள் உயிர் பெற்று ஓடிவிடும் என்றால், நாம் நம்பிக் கட்ட முடியுமா? ஒன்று விதைத்தால் வேறொன்றாய் விளையும் என்றால், நாம் நம்பிப் பயிர் செய்ய முடியுமா? பயிர் செய்யும்போது ஒன்றாகவும் விற்கும்போது வேறொன்றாகவும் மாறிவிடும் என்றால், நாம் நம்பி விற்க முடியுமா?

இயற்கையில் ஓர் ஒழுங்கு இல்லையென்றால் உலக வாழ்க்கையே நிலைகுலைந்து போய்விடும்; நம்பிக்கை அமையாது; அறியாமை நீங்குதலும் நிகழாமற் போகும். எந்த நாட்டில் எப்போது எது விளையும் என்று தெரிந்துகொள்ளமுடியாமல்

அரசியல் நிலைகளும், அறிவுநூல் எழுதும் நிலைகளும் மாறு பட்டு, எதுவும் ஒழுங்குக்கு வராமற் போய்விடும்.

இறைவனுடைய இயற்கைச் சட்டங்களின்படி இறைவனும் நடந்துகொள்வான். ஒரு நாட்டின் தலைவர் ஒரு சட்டத்தை இயற்றிவிட்டால், அச் சட்டம் உலக மக்களுக்கே என்றாலும், தாமும் அம் மக்களுள் ஒருவராய் இருத்தலால், அச் சட்டத் துக்கு அவரும் அடங்கியே கட்டுப்பாடாய் நடந்துகொள்வார்; அதுபோல, எல்லாம் வல்ல இறைவனும், இயற்கை ஒழுங்கு களுக்கு வேறாகாமல், அவற்றைப் பயன்படுத்துவதிலேயே கருத் திருத்துவான்.

'எல்லாம் வல்லவன்' என்பது, மூலப் பொருளில், ஒழுங்குகளை அறிந்து ஏற்படுத்துதலே; மற்று, மூலப்பொருளை உண்டாக்குதலன்று. இவ்வாற்றால் உலகு முதலிய விரிவுகள், ஒடுங்கியவாறே மீளவும் உயிர்களின் பொருட்டுத் தோற்றுவது இறைவனுக்குக் கடமையாய் இருக்கிறது. உலகு முதலிய பொருள்களும் அப் பெருமான் அமைத்த இயற்கை ஒழுங்கு களின்படியே இயங்கி வருகின்றன.

ஒடுக்கியவனிடத்திலிருந்தே, அவனை நிமித்த காரண மாய்க் கொண்டு, உள் பொருளாகிய மாயை என்னும் முதற் காரணத்திலிருந்து உலக விரிவுகள் ஆணவ மலம் காரணமாக, உயிர்களின் முன்னேற்றங் கருதி மீளவும் தோன்றுதலின், நூற் பாவில் ''ஒடுங்கி மலத்து உளதாம்'' எனவும் அவ் வொடுக் கக் கடவுளை தோற்றுவிக்குங் கடவுளுமாவார் எனவும் உண்மைகள் வந்தன; இவ்வாறு உண்மையே அதனிற் கூறப் பட்டது.

ஊன்றி நோக்கினுல் :

விதைகள் முளைப்பதற்கு விதைகளே முதற்காரணம்; என்றாலும், நிலமும் ஈரமும் முளைப்பதற்குத் தேவையாய் இருக்கின்றன. அந் 'நிமித்தங்'களைப்போல், உலக விரிவுகள் தோன்றுவதற்கு மாயை முதற் காரணமானாலும், இறைவனும் அவன் அருளும் நிமித்த காரணங்களாய் உள்ளன. பார்ப்ப வர்க்கு, நிலத்திலிருந்து பயிர்கள் தோன்றுகின்றன என்றே தோற்றும். சற்று ஊன்றிக் கருதுவோர்க்கே விதையிலிருந்து பயிர்கள் தோன்றுகின்றன என்று, பின்பு தெரியும். முதலில் தோன்றுவது நிலமே.

மாயையின் நிலை :

முதற் காரணமாகிய விதை நிலத்தின் உள்ளே அடங்கி இருக்கிறது. உலக விரிவுகளெல்லாம் ஒடுங்கிய மூலப் பொரு

ளாகிய முதற் காரண மாயை, இவ்வாறே இறைவனிடத்தில் அடங்கி விடுகிறது. அதனால் மாயையே இறைவன் ஏற்றுக் கொள்ளும் ஒரு பொருளாக (பரிக்கிரக சத்தி) நூல்கள் கூறும். இறைவன் செயலுக்கு மாயை உதவியாயிருப்பதனால், அதனிற் பதிந்து மாயையின் ஆற்றலைப்போல் தோன்றும் இறையாற்றல், 'சத்தி'யென விதந்தோதப்பட்டது. ஆயினும், மாயையின் தன்மைகள் வேறு; அவை ஏழு வகைப்படுதலை 'இருபா இருபஃது' விரித்துக் கூறும்:

'ஞானத்துக்கு மாறாக மயக்கமும் செய்தல், மெய் போலப் பொய் கூறுதல், மருண்டு தளர்தல், செல்வம் பெருக்குதலிலேயே ஆசை, கையிறுக்கத்தில் அழுத்தம், நன்மைக்கும் எதிர்ப்பியல்பு, நலங்களில் அச்சம்' என இவையெல்லாம் மாயையின் தன்மைகள்! இறைவனுக்கு உதவியாய் இருக்கும் அருளியல்பு பதிவதனால் மாயையின்பால் தோன்றும் ஆற்றல், மாயையின் ஆற்றலன்று என்பதை இத்தன்மைகளே விளக்கும்.

கன்மத்தால் பிறவி மாறுதல் :

இனிக், கன்மத்தைப் பற்றியும் சில அறிதல் இங்கு இன்றியமையாதது. 'இருபா இருபஃது', அதன் தன்மைகளையும், ஆறு வகையாகப் பகுத்துச், 'சோம்பல் கொண்டிருத்தல், வறுமையால் நுகர்வதொன்றும் இல்லாமற் கிடத்தல், பயன் கருதி ஒரு காரியத்தைச் செய்தல், விளைவு கருதாமலே தீவினையைச் செய்து விடுதல், கடமைகளைச் செய்யாது விடுதல், பிறரைத் தூற்றிக்கொண்டிருத்தலிலேயே நினைவாய் இருத்தல்' என்று விரிக்கும்; கன்மத்துக்கு அடையாளமான இவை, பிறவிக்கு முன்னும் நிகழக்கூடும், பின்னும் நிகழக்கூடும். இடையிலும் நிகழக்கூடும். இவை, மேலு மேலும் தொடர்ந்து, ஆணவ மலத்தால் மீளவும் தோன்றும்; பிறவியை எப்படி அமைக்கலாமோ அப்படி மாற்றிவிடும். பிறவிகளின் நிலை இவ்வாறு கன்ம மலத்தால் மாறுகின்றது.

ஒருவர் செல்வராய்ப் பிறக்கிறார்; மற்றொருவர் வறுமையில் தோன்றுகிறார். ஆசிரியர் போதிப்பது ஒருவர்க்கு எளிதில் விளங்குகிறது; மற்றவர்க்கு எட்டுவதே இல்லை. ஒருவர் அழகாய்த் தோன்றுகிறார்; மற்றொருவர் அழகின்றிப் பிறக்கிறார்; ஒருவர் நீண்ட ஆயுளில் வயங்குகிறார்; மற்றவர் விரைந்து மாண்டு போகின்றார்; இங்ஙனம் பல வேறுபாடுகளிற் பிறவி மாறி மாறித் தோன்றுகிறது. பிறவி மீளத் தோன்றுவது ஆணவத்தால் என்றால், தோன்றிய பிறவி இங்ஙனமெல்லாம் வேறு வேறாக மாறி அமைதல் கன்மத்தால் என்று அறிய முடிகிறது.

(தொடரும்)

உயிர்மெய்ம் முதல் வேர்ச்சொற்கள்

[ஞா. தேவநேயன்]

வல்[1]—வளைவுக் கருத்து வேர்ச்சொல் (தொடர்ச்சி)

வள்—வட்டு. ஒ. நோ: கள்—கட்டு, பள்—பட்டு.

(கள்ளுதல் = கூடுதல், சேர்தல், பொருந்துதல், ஒத்தல்; கட்டுதல் = ஒன்றுசேர்த்தல். பள்ளுதல் = பளபளப்பாதல் (வழக்கிறந்த வினை). பள்—பள—பளபள—பளபளப்பு. பள்—பளி—பளிச்சு. பளிச்செனல்=ஒளி வீசுதல். பளி—பளிங்கு. பட்டுப் பட்டெனல்=நிலவொளி விளங்குதல்.)

வட்டு=1. வட்டில். 2. பாண்டி விளையாட்டிற்குரிய வட்டச்சில். 3. சூதாட்டிற்குரிய வட்டக் கருவி. "கையாடு வட்டிற் றோன்றும்" (அகநா. 108) 4. குடைக் கம்பிகள் கூடும் சிறு சக்கரம். 5. வட்டப் பனைவெல்லக் கட்டி. 6. திரட்சி. (சூடா.) 7. திரண்ட பொருள். "முட்டி வட்டனைய கோல முத்துலாய்" (சீவக. 2950).

வட்டெழுத்து=வளைந்த தமிழெழுத்து வகை.
வட்டணை=வட்டமான மெத்தை யணை "வட்டணை... இரீஇயினரே" (சீவக. 2433).

வட்டு—வட்டம்=(பெ.) 1. வளைவு. "வில்லை வட்டப்பட வாங்கி" (தேவா. 5:9) 2. ஒரு வகை வளரித்தடி. "புகரிணர் சூழ் வட்டத் தவை" (பரிபா. 15:61), (பிங்.) 3. தோட்கடகம் (வாகுவளையம்). 4. வண்டிச் சக்கரம். (யாழ். அக.). 5. குயவன் சக்கரம். (பிங்.). 6. கதிரவனையுந் திங்களையுஞ் சூழும் கோட்டை (ஒளி வளையம்). 7. அப்ப வகை. "பாகொடு பிடித்த விழைசூழ் வட்டம்" (பெரும்பாண். 378). 8. கேடகம். "ஐயிரு வட்டமொ டெஃகுவலந் திரிப்ப" (திருமுரு. 111). 9. துலைத்தட்டு. "வட்டம தொத்தது வாணிபம் வாய்த்ததே" (திருமந். 1781). 10. ஆலவட்டம். "செங்கேழ் வட்டஞ் சுருக்கி" (நெடுநல் 58). 11. வட்டப்பாறை. "வட்வர் தந்த வான்கேழ் வட்டம்" (நெடுநல் 51). 12. தையிலையின் நடுப் பாகம். 13. கைம்மணி. (பிங்.) 14. நீர்ச்சால். (பிங்.) 15. கொள்கலம் (யாழ் அக.) 16. குளம். (பிங்.) 17. வட்டமரம். (W.) 18. களத்திற் சூடடிப்பதற்கு வட்டமாகப் பரப்பிய நெற்கதிர். (நாஞ்.) 19. சில வூர்களைக் கொண்ட நாட்டுப் பிரிவு. 20. சுற்றியுள்ள நிலப்பரப்பு. "கோயில் வட்டமெல்லாம்" (சீவக. 949). 21. வட்டச் செலவு. "தார் பொலி

புரவிவட்டந் தான்புகக் காட்டுகின்றாற்கு'' (சீவக. 442). 22. ஒரு சுற்று. (W.) 23. ஒருகோள் வான மண்டலத்தை ஒருமுறை சுற்றி வருங் காலம். அவன் சென்று ஒரு வியாழ வட்ட மாயிற்று. 24. திருத்தம். வட்டமாய்ப் பேசினான். (இ. வ.) 25. தடவை. ''விநாயகர் நாமத்தை நூற்றெட்டு வட்டஞ் செய்து'' (விநாயகபு. 74 : 214). 26. (இடை) தோறும். ஆட்டை வட்டம் காசு ஒன்றுக்கு......பலிசை. (S. I. I. ii, 122 : 27)

வட்டம்—பிரா. வட்ட, வ. வ்ருத்த. L. vert, vers.

வட்டமணியம் = நாட்டாண்மை. வட்டங் கூட்டுதல் = அணியமாதல்

வட்டம் — வட்டகை = 1. சிறுவட்டில். ''செம்பொற் றூமணி வட்டகையோடு'' (காஞ்சிப்பு. தழுவக். 333). 2. சிறு கிண்ணம். 'கொடியனார் வெள்ளி வட்டகை யூன்றிவாய் மடுப்ப'' (சீவக. 938). 3. நிலப் பரப்பு. ''ஊர் நாற்காத வட்டகை'' (சிலப். 5 : 133, உரை). 4. அடைப்புக் கட்டிய நிலம். (W) 5. சுற்றுப்புறம். 6. நாட்டுப் பிரிவு.

வட்டகை மணியம் = வட்டமணியம். (W.)

வட்டம்—வட்டணம் = 1. வட்டக் கேடகம். ''இட்ட வட்ட ணங்கண் மேலெறிந்த வேல்'' (கலிங். 413). 2. நெடு வட்டக் கேடகம். (யாழ். அக.)

வட்டணம்—வ. அட்டன.

வட்டணம்—வட்டணி. வட்டணித்தல் = 1. வட்டமாதல். 2. வட்டமாக்குதல்.

வட்டணிப்பு = வட்டமாயிருக்கை. ''குண்டல மென்று வட்டணிப்பைச் சொல்லவுமாம்'' (திருவிருத். 57, வ்யா. பக். 318).

வட்டணம்—வட்டணை = 1. வட்ட வடிவம். ''வாயினூ லால் வட்டணைப் பந்தர் செய்த சிலந்தி'' (தேவா. 507 : 2). 2. கேடகம். ''மன்னவர் காண வட்டணைவா ளெடுத்து'' (கல்லா. 48 : 8). 3. தாளக் கருவி. ''கொம்மைக் குயவட்டணை கொண் டிலனோ'' (கம்பரா. அதிகாயன். 9). 4. தாளம் போடுகை. (பிங்.) 5. அடிக்கை. (அரு. நி.) 6. உருண்டை. 7. இட சாரி வல சாரியாகச் சுற்றுகை. ''சுற்றிவரும் வட்டணையிற் றோன்றுவகை கலந்து'' (பெரியபு. ஏனாதி. 29). 8. வட்டமான செலவு. ''மாப்புண்டர வாசியின் வட்டணை மேல்'' (கம்பரா. படைத். 97). 9. தொழுதற்கு அறிகுறியாகத் தாமரை

மொட்டுப் போலக் கைகளைக் குவிக்கை. "வகைதெரி மாக்கட்கு வட்டணை காட்டி" (மணி 7 : 43). 10. வக்கணை. "வட்டணை பேசுவர்" (பதினொ. கோபப்பிர. 85).

வட்டம்—வட்டரவு = வட்டவடிவு. (யாழ்ப்.)

வட்டு—வட்டறவு = முடிவாக அறுதியிடுகை. (யாழ். அக.)

வட்டம்—வட்டன் = (பெ.) உருண்டு திரண்ட வுடம்பினன். "குறுவட்டா நின்னி னிழிந்ததோ கூனின் பிறப்பு" (கலித். 94 : 27).—(இடை.) தோறும்.

"ஆட்டை வட்டன் முக்குறுணி நெற்பொலிசை யாக" (S. I. I. ii, 69 : 3).

வட்டம்—வட்டா = வாயகன்ற வட்டக் கலவகை. 'வட்டா வுந் தாப்பூலமுந் துகிலுந் தாங்கி நிற்ப" (சீதக்.)

வட்டம்—வட்டாணி = திறமை, சமர்த்து. (திருவிருத். 71, அரும். பக். 371).

தெ. வட்டாரி.

வட்டம்—வட்டாரம் = 1. சுற்றுப்புறம். 2. நிலப் பரப்பு. தெ. வட்டாரமு, து. வட்டார, க. வட்டர.

வட்டு—வட்டி. வட்டித்தல் = (செ. கு. வி.) 1. வட்டமாதல். (யாழ். அக.). 2. சுழலுதல். "வட்டித்துப் புயலே றுரைஇம் வியலிரு ணடுநாள்" (அகநா. 218). 3. தாளவொற்றறுத்தல். (சூடா.) 4. சூளுரைத்தல். வட்டித்து விட்டா ளெறிந்தாள் (சிலப். 21 : 45)—(செ. குன்றுவி).

1. வளைத்தல். (இலக். அக.). 2. வளைத்து எழுதுதல். (சிலப். 21 : 46, அரும்). 3. சுழற்றுதல். "மருந்தில் கணிச்சி வருந்த வட்டித்து" (புறநா. 42). 4. உருட்டுதல். "கழகத்துத் தவிராது வட்டிப்ப" (கலித். 136). 5. சுற்றிக் கட்டுதல். "அலகில் மாலை யார்ப்ப வட்டித்து" (புறநா. 394). 6. பரிமாறு தல். (W.) 7. தோள் புடைத்தல். "செருவறைந்து பாழித் தோள் வட்டித்தார்" (பழமொ. 326).

வட்டி = 1. கடகப் பெட்டி. வேட்டுவன் "மான்றசை சொரிந்த வட்டியும்" (புறநா. 33). 2. கூடை. "பல்கல வட்டியர்" (அகநா. 391). 3. நாழி. (தொல். எழுத். 170). 4. கிண்ணம். (அக. நி.). 5. ஒரு விருது.

வட்டி—வட்டிகை = 1. வட்டம். (யாழ். அக.) 2. சுற்றளவு. 3. கூடை. (பிங்.) 4. கைம்மணி. (யாழ். அக.). 5. ஒடவகை.

"துள்ளியல் வட்டிகை துடுப்பிற் கடைஇ" (பெருங். உஞ்சைக். 40 : 46). 6. ஒருவகை விருது. "அலகில் வட்டிகை தழல் விழித்தலால்" (கலிங். 333). 7. சித்திர மெழுதுங் கோல். "வட்டிகைச் செய்தியின் வரைந்த பாவையின்" (மணி. 4 : 57). 8. சித்திரம். "வட்டிகைப் பாவை நோக்கி" (சீவக. 2085).

வட்டிப்பு=1. வட்டம். (யாழ். அக.) 2. சூள். (நாமதீப. 667).

வட்டி—வட்டில்=1. வட்டமான (வெண்கல) உண்கலம். 2. கிண்ணம். "பொன் வட்டில் பிடித்து" (திவ். பெருமாள். 4 : 3). 3 நாழி. (தொல். எழுத். 170; இளம்பூ.) 4. நாழிகை வட்டில். 5. அம்புக் கூடு. "வாளி வட்டில் புறம் வைத்து" (கம்பரா. தேரேறு. 39). 6. கூடை. (அக. நி.) 7. ஒருவகை விருது. "ஏறுமால் யானையே சிவிகை யந்தளக மீச்சோப்பி வட்டில்" (தேவா. 692 : 7). 8. அப்பளஞ்செய்ய உருட்டி வைக்கும் மாவுருண்டை. (இ. வ.)

க. பட்டலு (b).

வட்டிற்பூ=தாமரைப்பூ.

வட்டு—வட்டை=1. வேங்கையின் உடல்வரி (W.) 2. சக்கரத்தின்மேல் வளைமரப் பலகை. 'உருள்கின்ற மணி வட்டை" (சிலப். 29, உரைப்பாட்டு மடை) 3. தேர். (யாழ். அக.) 4. நிலப்பரப்பு. 5. வட்டப் பக்கா என்னும் பட்டணம் படி. (நாஞ்.)

வட்டக் கருத்துச் சொற்களுள்,

வட்டு, வட்டகை, வட்டணி, வட்டணை, வட்டரவு, வட்டா, வட்டாணி, வட்டாரம், வட்டித்தல், வட்டில், வட்டை என்னும் வடிவுகள் வடமொழியில் இல்லை. வட்டம் என்பது வ்ருத்த என்னும் வடிவிலும் வட்டணம் என்பது அட்டன (ந) என்னும் வடிவிலும் வழங்குகின்றன. ஏனையவற்றிற் கெல்லாம் வ்ருத்த என்பதையே மூலமாகக் காட்டுவது எத்துணையும் பொருந்தாது.

வட்டை—வடை=தேர்ச்சக்கர வடிவாகச் செய்யப்படும் உழுந்துப் பலகாரம்.

வடை—வ. வடா.

வடை—வடையம்=1. நெல்லிக்கனி முதலியவற்றை அரைத்துத் தட்டிய வடை. 2. பொட்டலமாகக் கட்டிய வெற்றிலை பாக்கு. (தஞ்.)

வட்டம்—வடம்=1. வட்டவடிவம் (அக. நி.). 2. வட்டமாகப் படரும் ஆலமரம். "வடநீழற் கண்ணூ டிருந்த குருவே" (தாயு. கருணா 1). 3. திரண்ட கயிறு. கமலை வடம், தேர் வடம். 4. திரண்டபொன் நாண். மணிவடம். "வடங்கள் அசையும்படி உடுத்து" (திருமுரு. 204, உரை).

வடம் (ஆலமரம்)—வ. வட (vata) இப் பொருளில் இச் சொற்கு வடமொழியில் வேரில்லை. மானியர் உவில்லியம்சு தம் சமற்கிருத—ஆங்கில அகரமுதலியில், perhaps Prakrit for *vrita* 'Surrounded, covered' என்று பொருட் காரணங் கூறியிருத்தலை நோக்குக.

வடம்—வடகு—வடகம்=தாளிப்புத்துணைக் கரணமாக, அரைத்த மாவுடன் கறிச்சரக்குகள் சேர்த்துப் பொரித்து வெயிலில் உலர்த்திய நறுமண வுருண்டை.

வடகம்—வ. வடக (vataka).

வள்—வர்—வரி. வரிதல்=1. எழுதுதல். (பிங்.) 2. சித்திரமெழுதுதல். "வல்லோன் றைஇய வரிவனப் புற்ற வல்லிப் பாவை" (புறநா. 33). 3. பூசுதல். 4. மூடுதல். "புண்ணை மறைய வரிந்து" (திவ். திருவாய். 5 : 1 : 5). 5. கட்டுதல். "வரிந்த கச்சையன்" (சூளா. சீய. 11).

வரித்தல்=1. எழுதுதல். "வள்ளுகிர் வரித்த சாந்தின் வனமுலை" (சீவக. 2532). 2. சித்திர மெழுதுதல். 3. பூசுதல். (சூடா.) 4. கோலஞ் செய்தல். "புன்னை யணிமலர் துறை தொறும் வரிக்கும்" (ஐங்குறு. 117). 5. கட்டுதல். "வரிக்குங் காட்சியிலா வறிவே" (ஞானவா. மாவலி. 48). 6. வரைந்து கொள்ளுதல். 7. திருமணஞ் செய்தல்.

வரி=1. கோடு. "நுண்ணிய வரியொடு திரண்டு" (சீவக. 1702. 2. தொய்யில் வரைவு. "மணிவரி தைஇயும்" (கலித். 76). 3 கைவரை. (பிங்.) 4 வரிசை, ஒழுங்கு. "குருகி னெடுவரி பொறப்" (பதிற்றுப். 83 : 2) 5. எழுத்து. (நாம தீப. 673). 6. நிறம். "வரியணி சுடர் வான்பொய்கை" (பட்டினப். 38). 7. அழகு. "வரிவளை" (பு. வெ. 11 : 12). 8. வடிவு. (அக. நி.). 9. இசை வகை. 10 இசைப்பாட்டு. "வரி நவில் கொள்கை" (சிலப். 13 : 38). 11. வரிக் கூத்து. "கண் கூடு வரியும்" (சிலப். 3 : 14). 12. கடைக்கழக நூல்களுள் ஒன்று. (இறை. 1, பக். 5). 13 கட்டு. "வரிச்சிலையாற் றந்த வளம்" (பு. வெ. 1 : 16). 14. குடியிறை. (பிங்.) 15. நெல். 'எடுத்துவரி முற்றத்தினிவிட்டு" (தனிப்பா. i, 354 : 41). 16. நீளம் (சூடா.).

தே. வரி, ம. வரெ, க. பரெ. (b.)

வரி—வரிசை=1. ஒழுங்கு. (சூடா.) 2. நிரை, தொடர். 3. தகுதி. "வரிசையறிதலும் வரையாது கொடுத்தலும்" (சிறுபாண். 217). 4. மேம்பாடு. "ஆடுகொள் வரிசைக்கொப்பப் பாடுவல்" (புறநா. 53). 5. மதிப்பு. (மரியாதை) "பொற்புற வரிசை செய்வான்" (திருவிளை. இந்திரன்முடி. 37). 6. பாராட்டு. "வரிசைப் பெரும் பாட்டெல்லாம்." (கலித். 85). 7. அரசராற் பெறுஞ் சிறப்பு. "பொற்பட்ட முன்னு வரிசைகள்" (திருவாலவா. 28 : 93). 8. அரசர் சிறப்புச் சின்னம். "சாமரை யக்க மாதியாம் வரிசையிற் கமைந்த" (கம்பரா. நிந்தனை. 12). 9. சீர்வகையிற் செய்யும் நன்கொடை. "மாமி வரவிட்ட வரிசை யென்று" (விறலிவிடு. 533).

தே. வருச.

வரி—வரிச்சு=1. கோடுபோல் நீண்ட கட்டு வரிச்சல். "வரிச்சு மேல் விரிச்சு மூட்டியே" (கம்பரா. சித்திர. 46).

வரிச்சு—வரிச்சல்.

வரி+அணம்=வரணம். ஒ. நோ : மடி—மரி+அணம்= மரணம்.

வரணம்=1. சூழ்கை. (யாழ். அக.) 2. சுற்று மதில். (இலக். அக.). 3. மறைக்கை. (இலக். அக.) 4. சட்டை. (நாமதீப. 454). 5. எழுத்து. 6. நிறம். 7. வகை. 8. குலம். 9. ஓசைவகை (வண்ணம்). 10. முரற்பாட்டு (தான வர்ணம்). 11. பாட்டிசை (வர்ணமெட்டு).

வரணமாலை=வண்ணமாலை (நெடுங்கணக்கு). வரணம்— வ. வர்ண, வரண.

வரண அல்லது வர்ண என்னும் வடசொல்லே தமிழில் வண்ணம் என்று திரிந்து வழங்குவதாகப் பேராசிரியர் உட்படப் பலருங் கருதிக்கொண்டிருக்கின்றனர். வண்ணம், வரணம் என்னும் இருசொல்லும் ஒருசிறிது வடிவு வேறுபட்டனவேனும், ஒரே வேரினின்று முறையே கீழ்ப்படையிலும் மேற்படையிலு மாகத் தோன்றினவென் றறிதல் வேண்டும்.

ஒ. நோ : திண்ணை, திரணை.

தில்லுமுல்லு=திண்டுமுண்டு. தில் — தெல் — தெள் — தெறு—தெற்று—தெற்றி=திண்ணை.

தில்—தின்—திண்—திண்ணை=திரண்டமேடை.

திள்—திண்டு, திள்—திட்டு—திட்டை.

தில்—திர்—திரள்—திரளை—திரணை = திண்ணை. திண்ணை, திரணை என்னும் இருசொல்லும், கீழ்ப்படையிலும் மேற்படையிலுமாக ஒரே வேரினின்று தோன்றி ஒரே பொருளை யுணர்த்துதல் காண்க. இங்ஙனமே வண்ணம் வரணம் என்னும் இருசொல்லுமெனக் கண்டு தெளிக. ‘திண்ணை’ ‘திரணை’யின் திரிபன்று; அங்ஙனமே, ‘வண்ணம்’ ‘வரணத்’தின் திரிபன்று, ‘வண்ணகவொத்தாழிசை’ வரணகவொத்தாழிசையென்று வழங்காமையும் நோக்குக.

வரணம்—வரணி. வரணித்தல் = பல நிறங்களைக் கொண்டு ஓர் ஓவியத்தைச் சிறப்பித்தாற் போன்று, பல சொற்களையும் அணிகளையுங்கொண்டு ஒரு பொருளைப் புனைந்துரைத்தல்.

வரணி—வ. வர்ண்.

வரணி என்பதை வர்ணி யென்றோ வருணி யென்றோ தமிழில் எழுதுவது தவறாகும்.

வரணி—வரணனை = புனைந்துரைப்பு. ‘அனை’ ஈறு.

வர்ணனை—வ. வர்ணனா.

வண்ணம், வண்ணி, வண்ணனை, வண்ணகம், வண்ணக்கன் என்னும் வடிவங்கள் வடமொழியிற் புகவில்லை.

மறைத்தற் கருத்தும் எழுதுதற் கருத்தும் வரணித்தற் கருத்தும் வளைதற் கருத்தொடு தொடர்புள்ளவையே. ஆதலால், சூழ்தலும் மறைத்தலும் பற்றிய சொல்லை வேறாகவும், நிறமும் வண்ணனையும் பற்றிய சொல்லை வேறாகவும், தமிழிற் பிரித்தல் கூடாது. எழுதுதல் என்பது வண்ணவோவியம் வரைதலையும் குறிக்கும். வண்ண அல்லது நிறக்கருத்தினின்றே, குலம், இசை, வண்ணனை முதலிய கருத்துக்கள் கிளைத்துள்ளன. எழுத்தும் வண்ணப்படமும் பெரும்பாலும் வளைத்தே எழுதவும் வரையவும் படுவதை இன்றுங் காண்க.

வரி (வரை)—வரந்து—வரந்தை = எல்லை, ஓரம், வரந்து—வரத்து = எல்லை. “இந் நாயனுர் திருப்பதியில் நாலு வரத்துக்குள்ளும் இருந்த குடிமக்களை” (Pudu. Insc. 176).

வரி—வரப்பு = எல்லை. வரம்பு - வரப்பு = வயல் வரம்பான திட்டு.

வரி—வரை. வரைதல் = 1. எழுதுதல். 2. சித்திரம் எழுதுதல். 3. கோடிட்டு எல்லை குறித்தல். 4. அளவு படுத்துதல். “வரையாப் பூசலொண்ணுதன் மகளிர்” (புறநா 25). 5. திட்டஞ் செய்தல். “புகழொடுங் கழிகநம் வரைந்த-

நாளென'' (மலைபடு. 557). 6. அடக்குதல். ''வரைகிலேன் புலன்களைந்தும்'' (தேவா. 631 : 1.) 7. விலக்குதல். ''உருவு கொளல் வரையார்'' (தொல் எழுத். 41.). 8. கைவிடுதல். ''கொள்கலம் வரைதலின்'' (கலித். 133). 9. மறுத்தல், வரிசை யறிதல். ''கொடைமட மென்ப தம்ம வரையாது கொடுத்தலாமே'' (சூடா.). 10. நேர்மை வழியில் ஈட்டுதல். ''வரைபொருள் வேட்கையேன்'' (சிலப். 10 : 51). 11. தனக்குரிய தாக்குதல். ''அறன்வரையான்'' (குறள். 150). 12. மணஞ் செய்தல். ''வெளிப்பட வரைதல் படாமை வரைதல்'' (தொல். கள. 49).

வரை (எழுது)—தெ. வ்ராயு.

வரை=1. கோடு. 2. வரி (இரேகை) 3. எழுத்து. (பிங்.) 4. கணுவரையுள்ள மூங்கில். ''மால்வரை நிவந்த வெற்பின்'' (திருமுரு 12). 5. சுவர்போல் நிலத்தை வரையறுக்கும் மலை. ''பனிபடு நெடுவரை'' (புறநா. 6.). 6. எல்லை. ''வளவரை'' (குறள். 480). 7. சிறுவரம்பு. (W) 8. நீர்க்கரை. (சூடா.). 9. அளவு. ''உளவரை'' (குறள். 480). 10. கால வரம்பு, காலம். ''சிறுவரை'' (பு வெ. 12, பெண்பாற். 17). 11. இட வரம்பு, இடம். ''மலைவரை மாலை'' (பரிபா. 10 : 1). மட்டுணர்த்தும் சொல். வரை, வரையும், வரைக்கும்.

வரை—வரைப்பு=1. எழுதுகை. வட்டிகை வரைப்பும் வாக்கின் விகற்பமும் (பெருங். உஞ்சைக். 34 : 168). 2. எல்லை. ''இடைநில வரைப்பின்'' (மணி. 28 : 24). 3. மதில். ''அருங்கடி வரைப்பி னூர்கவி னழிய'' (பட்டினப். 269). 4. வரைந்து கொள்ளப்பட்ட இடம். ''வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்'' (தொல். செய். 78). 5. சுவர் சூழ்ந்த இடம். (சீவக. 949, உரை) 6. மாளிகை. ''துணையொடு திளைக்குங் காப்புடை வரைப்பின்'' (அகநா 34). 7. குளம். ''புனல் வரைப்பகம் புகுந்தோறும்'' (பொருந. 240). 8. ஞாலம், உலகம். ''தண்கடல் வரைப்பில்'' (பெரும்பாண். 18).

வள்—வர்—வார். வார்தல்=சாய்தல், வளைதல். வார்—வாரம்=சரிவாயிருக்கும் மலைச்சாரல். ''வாரம தெங்கும் பண்டிகளூர'' (இரகு. திக்கு. 258). 2. சாய்வா யிருக்கும் தாழ் வாரம்.

வார்—வாரி=1. மதிற்சுற்று. ''வடவரை நிவப்பிற் சூழ வாரியாப் புரிவித்து'' (கந்தபு. அசுரர்யாக. 36). 2. செண்டு வெளி. ''குஞ்சரம் வாரியுள் வளைத்தவே'' (சீவக. 275). 3. நிலஞ் சூழ்ந்த கடல். (பிங்.) வாரி (கடல்). வ வாரி, L. Mare.

வார்—வாரணம்=1. வளைவு, சூழ்வு. 2. வட்டமான கேடகம். (W). 2. உள் வளைந்த சங்கு. (பிங்). 3 நிலஞ் சூழ்ந்த கடல். 4. சூழ்வதால் அல்லது சுற்றி மூடுவதால் ஏற் படும் மறைப்பு. "வாரண மாயை" (பாரத. திரௌ. 17). 5. தடை. 6. கவசம். (பிங்.) 7. சட்டை. (சூடா). 8. காப்பு. (W).

வாரணம் (கடல்)—வ. வாருண, L. marinus. வள்—வாள்=வளைவு. வாள்வரி=வேங்கைப்புலி. "மதகரிக் களபமும் வாள்வரிப் பறழும்" (சிலப். 25 : 49).

வாள்—வாளம்=வட்டம். "வாளமாகவோர் பவளமால் வரை.........வளைந்தென்ன" (பாரத. காண்டவ. 11). 2. சக்கர வாள மலைத்தொடர். (யாழ். அக.). 3. சக்கரவாகப்பறவை. "மங்கைமார் தடமுலையெனப் பொலிவன வாளம்" (கம்பரா. பம்பை. 21). வாளம்—வ. வால.

வாள்—வாளி=1. வளையமான மூக்கணி. 2. வளையமான காதணி. "வாளி முத்தும்" (குமர. பிர. முத்து. பிள். 11).

வாளி—வ. வாலீ. வாளி—வாளிகை=சிறு காது வளையம். "சுட்டிகையும் வாளிகையும்" (பதினொ. திருக்கைலாய. 68). வாளிகை—வ. வாலிகா.

வாளி=வட்டமாயோடுகை. "வாளி வெம்பரி" (பாரத. குரு. 108).

வாளி போதல்=குதிரை வட்டமாயோடுதல். "மாதிர முறப்பல வாளி போதுமால்" (பாரத. சூது. 121).

வாளி—வ. பாலி. வடசொல்லின் பகர முதலை நோக்குக. வாள் — வாடு — வாட்டம் = சாய்வு. அங்கணம் வாட்டஞ் சாட்டமா யிருக்கவேண்டும். (உ. வ.)

வாளி—வாசி=அணிவளைவான திருவாசி. "மாணிக்க வாசி முந்து சிங்காதனம்" (திருவாலவா. 37 : 75).

வாசி — வாசிகை = திருவாசி. ஒ. நோ. உளு—உசு, இளி—இசி.

இக்கட்டுரை முற்றும்.

குறிப்பு: *வேர்ச்சொற்கட்டுரைகளைப் படித்து வரும் அறிஞர்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவிப்பின் பதிப்பாளர்க்கு ஊக்கமும் மகிழ்ச்சியும் தருவதாயிருக்கும்.*

சங்க இலக்கியத்தில் மணிகள்

[திரு. பி. எல். சாமி, பி.எசி.]

(முன் கூஅஆம் பக்கத் தொடர்ச்சி)

சங்க நூல்களில் கூறப்படும் மணிகளுள் மிகச் சிறந்த மணி வைரமாகும். வைரத்தையே இன்றும் மணிகளுள் விலையுயர்ந்ததாகவும் சிறந்ததாகவும் கூறுவர். பதிற்றுப்பத்தில் வைரத்தைப்பற்றித் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது

''திருமணி பொருத திகழ்விடு பசும்பொன்
வயங்குகதிர் வைரமோ டுறழ்ந்துபூண் சுடர்வர
எழுமுடி கெழீஇய திருஞெம ரகலத்து''

—பதிற்றுப்பத்து 16-15.

வயிரமணி வயங்குகதிர் உடையதாகக் கூறியிருப்பதைக் காணலாம். பதிற்றுப்பத்து 45ஆம் பாட்டில் ''வயங்குமணி இமைப்பின் வேலிடுப'' என்று கூறியிருப்பதைக் கவனிக்க வேண்டும். வயங்குமணி என்றது வைரத்தையே என்று கருதலாம். வயங்கு என்பதற்கு இமைக்கும் ஒளியுடையது என்று பொருள் கொள்ளவேண்டும் மணியிமைப்பு போலும் மின்னுக்கு மணியிமைப்பென்பது பெயராயிற்று என்று பழைய உரை கூறியிருப்பதைக் காணலாம். வைரமணி வானவில்லின் நிறங்களைப் போல மாறிக் காட்டும் ஒளியுடையது என்று சிலப்பதிகார உரையில் கூறப்பட்டுள்ளது. வைரத்தின் குணங்களைக் கூறும் பாட்டை அடியார்க்கு நல்லார் மேற்கோள் காட்டியுள்ளார்.

''பலகை எட்டுங் கோணம் ஆறும்
இலகிய தாரையும் சுத்தியும் தராசமும்
ஐந்தங் குணமென் றறைந்தனர் புலவர்
இந்திர சாபத்து இகலொளி பெறினே''

—சிலம்பு - ஊர்காண் - வரி - 180-183.

—உரை மேற்கோள்.

இகல் ஒளி என்றது மாறுபட்ட நிறங்களைக் காட்டும் தன்மையாகும். வைர மணியின்மேல் ஒளி படும்போது பல நிறங்களைக் காட்டும் என்று மணிநூல் வல்லுநர் கூறுகின்றனர். வயங்கிய என்ற சொல் இக்கருத்தையே குறிப்பிடுகின்றது. கிரேக்க, உரோம ஆசிரியர்கள் எழுதின நூல்களிலிருந்து சங்ககாலத்தில் தமிழகத்தின் மேற்குக் கடற்கரைத் துறைமுகங்களின் வழியாகப் பல மணிகள் ஏற்றுமதி செய்யப்பட்டன என்பதை முன்னரே குறிப்பிட்டுள்ளேன். அந்த மணிகளிலும் வைரத்தைத் தவிரப் பிற மணிகள் எல்லாம் பெரும்பாலும் இந்தியாவில் பிறந்தவை

அல்ல என்று அவர்களே குறிப்பிடுவதைக் கவனிக்க வேண்டும். வைரத்தை முதலில் வெளிநாட்டினர் உணர்ந்தது இந்தியாவின் வழியாகவே என்று அறிஞர்கள் குறிப்பிட்டுள்ளனர். ஆதலின் சங்க காலத்தில், கி. பி. முதல், இரண்டு நூற்றாண்டுகளில் தமிழ் நாட்டுத் துறைமுகங்களிலிருந்து மேற்கத்திய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட மணிகளுள் வைரம் மிகச்சிறந்த மணி யாகும் என்பதை உணர வேண்டும். இந்த வைரம் இந்தி யாவில் சுரங்கங்களிலும் ஆற்றிலும் பள்ளத்தாக்குகளிலும் கிடைத்தது. பெரிப்புளூஸ் என்ற ஆசிரியர் வைரத்தைத்தவிர இந்தியாவில் வேறு மணிகள் நிறையக் கிடைக்கவில்லை என்றும் மற்ற மணிகள் எல்லாம் ஈழ நாட்டிலிருந்து இந்தியா விற்குக் கொண்டுவரப்பட்டு ஏற்றுமதியாயின என்றும் கூறி யிருப்பதால் சிறப்பாகத் தமிழரே சங்க காலத்தில் எல்லாவகை மணிகளையும் அறிந்திருந்தனர் என்று கருத வேண்டும். மணி மேகலை 'மணிபல்லவம்' என்று குறிப்பிட்டுள்ள ஈழநாட்டுப் பகுதியில்தான் உலகத்திலேயே பல வகையான மணிகள் இன்றும் கிடைக்கின்றன. கொழும்பிலிருந்து 99 கி. மீ. தொலை வில் உள்ள இரத்தினபுரம் என்ற ஊரைச்சுற்றித்தான் இன்று நிறையப் பலவகை மணிக்கற்கள் (Ruby, Sapphire, Cat's eye, tourmaline, alexandrite, ameythist, auamarina, topaz, spinel, garnet, citrine, agate, zircon and moon-stons). கிடைக்கின்றன இன்றும் 14 வகை மணிக்கற்கள் கிடைக் கின்றன என்பதைக் கவனிக்க வேண்டும். ஆதலின் மணி பல்லவம் என்று மணிமேகலை கூறியிருப்பது மிகவும் பொருத்தமே. மணிகள் மிகுந்த இந்த இடம் பல்லவருடைய மேலாட்சிக்குக்கீழ் வந்ததால் 'மணிபல்லவம்' என்று பெயர் வழங்கியிருக்கலாம். ஆனால், இவ்வளவு மணிக்கற்கள் கிடைத்த இரத்தினபுரத்தில் வைரம் அக்காலத்திலே கூறப்படவில்லை. இரத்தினபுரத்தில் இன்று விளையும் கற்கள் மாணிக்கமும் நீலமும் தவிர வைரம் இல்லை. ஆதலின் சங்க காலத்திலேயே ஏற்றுமதி செய்யப்பட்ட வைரக்கற்கள் தமிழ் நாட்டிலும் இந்தி யாவிலும் கிடைத்தவையே என்பதில் ஐயமில்லை. இவை சங்க காலத்தில் உரோம, கிரேக்க நாடுகளுக்குத் தமிழ்நாட்டுத் துறைமுகங்களின் வழியாக ஏற்றுமதி செய்யப்பட்டன. பதிற் றுப்பத்து இரண்டாம்பத்தில் யவனர்களிடம் இருந்து அருவிலை நன்கலங்களை வைரமணிகளோடு இமையவரம்பன் நெடுஞ் சேரலாதன் கைப்பற்றினன் என்று கூறியிருப்பதிலிருந்து சங்க காலத்திலேயே உரோமரும் கிரேக்கரும் தமிழ்நாட்டி லிருந்து வந்த வைரங்களை மிகவும் போற்றினர் என்பது தெரிகின்றது.

"அருவிலை நன்கலம் வயிரமொடு கொண்டு
பெருவிறன் மூதூர்த் தந்து பிறர்க்குதவி"
—பதிற்றுப்பத்து 2ஆம் பதிகம் 10-11

அயோனியர் (Ionians) என்ற யவனர் போற்றிய வயிரத்தைப் பதிற்றுப்பத்து கூறியுள்ளது. இந்த வைரம் தமிழ்நாட்டிலிருந்து சென்றதாகும். வயிரம் என்ற பெயர் பதிற்றுப்பத்தைத் தவிர அகநானூற்றிலும் புறநானூற்றிலும் அரிதாக வழங்கியுள்ளது.

"வயிரத் தன்ன வையேந்து மருப்பின்" —அகம், 178

"நன்னகர் மாந்தை முற்றத் தொன்னார்
பணிதிறை தந்த பாடுசால் நன்கலம்
பொன்செய் பாவை வயிரமொடு ஆம்பல்
ஒன்றுவாய் நிறையக் குவைஇ" —அகம், 127

"வயிரக் குறட்டின் வயங்குமணி யாரத்துப்" —புறம், 365

அகநானூறு 127ஆம் பாடலிலும் சேரலாதன் தன்னுடைய பகைவரிடமிருந்து வைரத்தைத் திறையாக நிறையப் பற்றியதாகக் கூறப்பட்டுள்ளது. வைரத்தை மணிகளில் மிக உறுதியானதாகக் கருதுவர். வைரத்தின் உறுதியுடைய காட்டுப் பன்றியின் எயிற்றைப்பற்றி அகநானூறு கூறியுள்ளது. வைரத்தையே பிற மணிகளில் துளை போடவும் அறுக்கவும் பட்டையிடவும் பயன்படுத்தினர். வைரத்தின் முதன்மை துளையிடும் தன்மையால் பெற்றது என்று திருவிளையாடல் புராணத்தில் கூறப்பட்டுள்ளது.

"வைர ஊசியும் மயன்வினை இரும்பும்
செயிரறு பொன்னைச் செம்மைசெய் ஆணியும்
தமக்கமை கருவியும் தாமாம்."

இந்த மேற்கோளில் வைரத்தை வைரம் அறுக்கும், இரும்பை இரும்பு வெட்டும், பொன்னைப் பொன்னால் செய்த ஆணி வெட்டும் என்று அவற்றுக்கு அமைந்த கருவிகள் அவைதாம் என்று கூறியுள்ளார். "கண்ணாடி யறுக்கும் கூரிய வைரம்" என்று நன்னூல் உரையில் கூறியிருப்பதையும் காணலாம். இன்றும் கண்ணாடியை அறுக்க வைரம் பயன்படுகின்றது. வைரத்தின் திண்மையும் வலிமையும் நன்கு தெரிந்ததே. சங்க நூல்களில் வைரத்தைத் 'திண்மணி' என்று குறிப்பிட்டுள்ளனர்.

"சீர்கெழு சிலம்பி னன்பொன் னகழ்வோன்
கண்பொரு திமைக்குந் திண்மணி கிளர்ப்ப" —அகம், 282

திண்ணிய மணி வைரமாகவே இருக்கலாம். "கண்பொருது இமைக்கும்" என்று கூறப்பட்டிருப்பதால் வைரம் என்று

கொள்ளவேண்டும். வைரக்கற்கள் இந்தியாவில் பெரும் பாலும் பாறைகளிலிருந்தும் மணற்பாங்கான பகுதிகளிலிருந் தும் ஆற்றுப்படுகைகளிலிருந்தும் கிடைத்தன.

"அட்டுநீ ரருவிக் குன்றத் தல்லது வைரந் தோன்ரு"
—சிந்தாமணி, 2925

சிந்தாமணியில் நீர் சொரியும் குன்றிலே வயிரந்தோன்றும் என்று கூறியுள்ளதைக் காணலாம். நீர்திகழ் சிலம்பில் பொன்னே அகழ்ந்தவனுக்கு வைரமணி கிடைத்ததாக அகநானூறு கூறுவதால் சங்ககாலத்தில் ஆற்றுப் படுகையில் வைரங் கிடைத்தது தெரிகின்றது. சங்ககாலத்திலே முசிறி, தொண்டித் துறைமுகங்கள் வழியாக வைரம் எற்றுமதியானதாகப் பிளினி கூறியிருக்கின்ருர். கோலாரிலே பொன்னும் கிடைப்பதால் பொன்ளுேடு வைரம் கிடைத்ததாகச் சங்கநூல்களில் கூறும் செய்தி பொருத்தமே. வைரம் ஆந்தி ராவிலே பெருவாரியாகக் கோல்கொண்டா முதலிய இடங்களி லும் கோதாவரி, கிருஷ்ணு பள்ளத்தாக்குகளிலும் கிடைத்தன என்று கூறுவர். சிந்தாமணியில் 'வடவரை வைரச் சாதி' என்று கூறப்பட்டுள்ளது. சங்கநூல்களில் மலேயிடைப் பிறந்த மணியாகக் கூறும் மணி வைரமாகவே இருக்கலாம்.

"பொன்னுந் துகிரு முத்து மன்னிய
மாமலே பயந்த காமரு மணியும்" —புறம், 218

"மலேயிடைப் பிறவா மணியே யென்கோ" —சிலம்பு 2: 77

மணிகளில் உயர்ந்ததாக வைரத்தைக் கூறுவதால் மாமலே பயந்த காமரு மணி வைரமாகவே இருக்க வேண்டும்.

"ஞாயிற் றன்ன வாய்மணி மிடைந்த
மதியுற ழாரம் மார்பிற் புரள" —புறம், 862

"திறல்விடு திருமணி யிலங்கு மார்பின்"
பதிற்றுப்பத்து 46—3

"அருவரை மருங்கி ளுய்மணி வரன்றி
ஒல்லென விழிதரு மருவிகின்" — ஐங்குறுநூறு, 233

"கட்சி காணுக் கடமா நல்லேறு
கடறுமணி கிளரச் சிதறு பொன் மிளிரக்" —புறம், 202

"பெருமலே நுடக்கம் போலத் தோன்றிய
பெருமலே வயின்வயின் விலங்கு மருமணி
அரவழங்குப் பெருந் தெய்வத்து
வளே ஞரலும் மணிப் பௌவத்து"

ஆய்மணி என்று கூறப்பட்ட தெரிந்தெடுத்த மணி வைரமாகவே இருக்கலாம். ஞாயிற்றன்ன ஒளி என்பதால் வெண்மையான ஒளிவீசும் வைரத்தைக் குறிப்பிட்டதாகக் கருதலாம். மலே யிலிருந்து இறங்கும் அருவி கொண்டுவரும் மணி என்றும் மலேச் சாரலில் கிளர்ந்து சிதறும் மணி என்றும் சொல்லப் படுவதால்

வைரமென்று கொள்ளலாம். திறல்விடு திருமணி என்பதற்குக் கூறிய உரையில் பிற ஒளியில் திறலுடைமையால் ஆகுபெயரால் இவ்வொளிக்குத் திறலென்று பெயராயிற்று என்று கூறியிருப்பதைக் காணலாம். ஆதலின் பிற ஒளி படும்போது எதிர் ஒளி விடும் மணி வைரமாகவே இருக்க வேண்டும். சிலப்பதிகாரத்தில் "இந்திரசாபத்து இகல் ஒளி'' என்று மேற்கோள் காட்டப்படுவதிலிருந்து வானவில்லின் நிறங்களைக் காட்டும் வைரம் என்பது தெரிகின்றது. வயின்வயின் விளங்கும் அருமணி என்று கூறப்பட்டுள்ள மணியும் வைரமாகவே இருக்கவேண்டும். வைரங்களில் இன்றும் சிறந்ததாகக் கருதப்படும் பழங்காலத்து வைரங்கள் கோகினூர், பிட், கல்லினன் என்ற வைரங்களாகும், பிற்கால நூலான சிந்தாமணியில் வைரப்பூண், வைரவாள், வைரக்கிம்புரி, வைரத்தோட்டி ஆகியவை கூறப்பட்டுள்ளன.

திருவிளையாடல் புராணத்தில் மாணிக்கம், முத்து, வைரம், மரகதம், நீலம் ஆகியவையே விலையுயர்ந்த மணிகள் என்று கூறப்பட்டுள்ளன. மற்றவை சிறுவிலைபெறும் மணிகள் என்று கூறப்பட்டுள்ளன. சங்க நூல்களில் சிறிய விலையுள்ள கற்களும் கூறப்பட்டுள்ளன. அகநானூற்றில் சிறுகாரோடன் என்ற தொழிலாளி பயினொடு சேர்த்திய கல் கூறப்பட்டுள்ளது.

"அறுகோட் டியானைப் பொதினி யாங்கட்
சிறுகா ரோடன் பயினொடு சேர்த்திய
கற்போற் பிரியல மென்ற சொற்றும்'' —அகம், 1

"தொன்னசை காவாமை நன்னன் பறம்பிற்
சிறுகா ரோடன் பயினொடு சேர்த்திய
கற்போல் நாவினேன் ஆகி மற்றது' —அகம், 356

சிறுகாரோடன் என்பவன் சாணைக்கல் செய்பவன் என்று உரையிலிருந்து தெரிகின்றது. இயற்கையில் கிடைக்கும் சாணைக் கல்லை உருவாக்கும் தொழில், சங்ககாலத்தில் பழனியிலும், வடமலையாளத்தில் நன்னன் பறம்பிலும் இருந்ததாக அகநானூறு கூறியுள்ளது. இந்தச் சாணைக்கல் ஒருவகைத் தாழ்ந்த குருந்தக் கல் என்றே அறிஞர் கருதுகின்றனர். இதையே Corundam என்று ஆங்கிலத்தில் இன்று அழைப்பதாகக் கருதுவர். வடமலையாளத்தில் நன்னன் பறம்பில் சாணைக்கல் கிடைத்ததாக அகநானூறு கூறியதற்கேற்பத் தென்கன்னட கெசட்டீர் என்ற நூலும் வடமலையாளத்திலும் தென்கன்னடத்திலும் சாணைக்கல் கிடைப்பதைப்பற்றிக் கூறியிருப்பதைக் கூர்ந்து கவனிக்க வேண்டும். ஆதலின் சங்கநூற் செய்திகள் கண்டு கேட்டுத் தெரிந்து கூறின உண்மைச் செய்திகளே என்பதில் ஐயமில்லை.

(தொடரும்.)

உண்மையும் உணர்ச்சியும்

[டாக்டர். சொ. சிங்காரவேலன், எம்.ஏ., பிஎச்.டி.,

தமிழ்த்துணைப் பேராசிரியர், அ. வீ. அ. கல்லூரி, மாயூரம்]

கவிதையில் உண்மையும் உணர்ச்சியும் :

"பிறர் துன்பத்தைக் காணும்போது தன் துன்பம் போல் எண்ணி வருந்தும் இயல்புடைய ஒருவனும், பிறர் துன்பத்தைக் கருதாத ஒருவனும் யாப்பிலக்கணம் படித்துக் கவிதை செய்யப் பழகுவாராயின், முந்தியவன் உண்மையான கவிதை எழுதுவான்; பிந்தியவன் பதங்களைப் பின்னுவான்; இவனுடைய தொழிலிலே கவிதை இராது" என்று பாரதியார் எழுதும் வரிகள் கவிதைகளுக்கும் செய்யுட்களுக்கும் இடையே உள்ள வேறுபாட்டை எடுத்துரைக்கின்றன. [பார்க்க—"பாரதியார் கலைகள்"—இன்பநிலையம், சென்னை, (1963) பக். 8] எனவே தான் [1]"உண்மையை உள்ளபடியே உரைக்க இலக்கியம் முயல்வதில்லை; உண்மையோடு, உணர்ச்சிப் பகுதியையும் இணைத்தே அஃது உரைக்க முற்படுகின்றது" என்று வின்செஸ்டர் விளம்புவதை நாம் ஒத்துக்கொள்ள வேண்டியுள்ளது.

அகப்பாட்டொன்று :

சங்க இலக்கியங்களில் இத்தகைய பண்புகள் நிறைந்த கவிதைகள் பலவற்றைக் காணலாம். பழந்தமிழ்மக்கள் அக வாழ்வைப் படம்பிடிக்கும் அகநானூற்றுப் பாடல்களுள் ஒன்று இங்கு நம் சிந்தனைக்குரியதாக உள்ளது. நித்திலக்கோவைப் பகுதியில் அமைந்தது; அஞ்சியத்தை மகள் நாகையார்[2] என்ற புலவர் பாடிய குறிஞ்சித் திணைப் பாட்டு. (352)

பின்னணி என்ன? :

களவு ஒழுக்கம் தலைப்பட்டுப் பிறகு கற்புநெறியில் ஒரு தலைவனும் தலைவியும் மனையறம் புரியத் தலைப்படுகின்றனர். திருமணம் முடிந்து சில காலமே ஆகியுள்ளது. மணக்கோலம் பூண்ட வீடு இன்னும் அந்த அழகு மாறுமல் உள்ளது. தலைவி

---

1. "Literature never attempts to state the fact nearly as fact, literature renders the fact plus its emotional relations"—Winchester C.T. "Some Principles of Literary criticism".

2. 'அஞ்சிலாந்தை மகள் நாகையார்', 'அஞ்சிலாந்தை மகளுர்' என்ற பாட வேறுபாடுகளும் காணப்படுகின்றன.

யின் தோழி, தலைவியின் திருமண வாழ்விற்கு உறுதுணை புரிந்தவள் தலைவியைக் காண வருகின்றாள். அப்போது தலைவி தோழிக்குக் கூறுவதாகக் கற்பனைப் பின்னணியைக் கவிஞன் அமைத்துக் கொள்கின்றான்; ஆம் இன்ப அன்பின் மனைவாழ்வு தலைப்பட்ட மங்கை ஒருத்தியின் மனம் இங்கே வாய்விட்டுப் பேசுகின்றது. தன்னுடைய இன்ப துன்பங்களிற் பங்கு ஏற்கும் பண்புநலம் வாய்ந்த தன் தோழியைக் கண்டதும் தலைவியின் மனத்தே உணர்ச்சி யலைகள் பொங்குவது இயற்கை ய அன்றோ? தோழி களவுக் காலத்துப் பல்வேறு உதவி செய்திராவிட்டால் தான் தன்னுடைய காதலனைக் கற்புமணம் செய்து மகிழ்ந்திட முடியாது அன்றோ என்று அந்தப் பெண் உள்ளம் எண்ணி எண்ணி உருகியிருந்திருக்கும்; ஆம்; சொற்கள் அவ்வாறு அந்த உணர்ச்சிக்குப் படிவம் சமைக்கின்றன.

இரண்டு நிலைகள் :

நடைமுறையில் இயலாக் கற்பனை நிலை, இயற்பண்பு நிலை, நடைமுறை மெய்ம்மை நிலை என்று புதிய இலக்கியங்களை இக்காலத்துப் பாகுபாடு செய்யக் காண்கின்றோம். இம் மூன்றுள் இவ்வகக் கவிஞன் கையாள்வன முதல் நிலை நீங்கிய ஏனை இரண்டை என்று கருதலாம். ஆம்; நடைமுறைக்கேற்ற சூழ்நிலையை உருவாக்கிக்கொண்டு, இயற் பண்புநிலை தோயத் தன் கவிதையை அமைத்துக் கொண்டுள்ளான்.

உள்ளம் தோய்ந்த உரை :

"காதல் அம் தோழி! நல்லை, காணில்" என்ற சொற்கள் தலைவியின் இதழ்களினின்று உதிர்கின்றன. "விருப்பத்திற்கேற்ற—காதல்மிக்க அழகிய தோழி! ஆராயுமிடத்து நீ மிகவும் நன்மை உடையை" என்ற பொருள் படைத்த இச் சொற்கள் தோழியைப் பற்றிய தலைவியின் மதிப்பீட்டைத் தெளிவாக்கி விடுகின்றன. சிந்தித்துப்பாராத விடத்து, முன்னர்த் தோழியின் சிற்சில பேச்சுகளும், சிற்சில செயல்களும் நன்மை தராதன போலத் தோன்றியிருக்கவும் கூடும். ஆனால், ஆராய்ந்து தெளியுங்கால், அவை நன்மைப் பின்னணியே வாய்ந்தவை என்று புலப்படுமாறு அமைந்தன. ஆதலின் 'காணில்' (ஆராய்ந்து காணில்) என்ற சொல்லைத் தலைவி அமைத்துப் பேசுகின்றாள்.

தலைவன் களவொழுக்கக் காலத்தே இனியவனாக இருந்தது போன்று, திருமணக்காலத்தும் இனியவனாக இருந்தான்.

அந்த உண்மை தலைவியின் அடிமனத்தே குடிகொண்டிருக்கின்றது. அதனைத் தோழியிடம் கூற எண்ணுகின்ற அவள், அதனை அப்படியே கூறாது உணர்ச்சிக் கூறுகள் சிலவற்றோடு கூட்டி நயமாக உரைக்கின்றாள்; இதனாலேயே சீரிய கவிதைப் பண்பு இங்கே ஒளிவிடுமாறு இக் கவிதை படைக்கப் பட்டுள்ளமையை நாம் உணர முடிகின்றது.

"வதுவை நாளினும் இனியனால் எமக்கே" என்ற முற்றுப்புத் தொடர் மிகவும் இனிமையாக மாட்சிமை தோன்ற இதனை உரைத்துள்ளது.

அதியமான் அஞ்சி என்ற பெருவீரம்படைத்த வள்ளலின் பழைய புகழை நிலைபெறுமாறு நல்லிசைப்படுத்தும் பாண்மகன் ஒருவன், நல்ல இசைகளை வரையறை செய்த இனிய நூலின் பண்ணைக் காட்டிலும், அவன் புதிதாக இயற்றி இசைத்த பண்ணின் திறத்தைக் காட்டிலும் நமக்கு இனியனாக உள்ளான் தலைவன்—என்று விளக்கம் தருகின்றாள் இங்கு:

"கடும்பரிப் புரவி நெடுந்தேர் அஞ்சி
நல்லிசை நிறுத்த நயவரு பனுவல்
தொல்லிசை நிறீஇய உரைசால் பாண்மகன்
எண்ணுமுறை நிறுத்த பண்ணி னுள்ளும்
புதுவது புனைந்த திறத்தினும்
வதுவை நாளினும் இனியனால் எமக்கே"

இங்கு, இதயத்தை நெகிழ்விக்கும் புதிய பண்ணையும் அப் பண்ணின் வெளிப்பாடாகிய புதிய திறத்தையும் தலைவனது புதிதாகிய காதலால் விளைந்த இனிமைக்கு உவமைப் படுத்தி யுள்ள திறம் உணர்ச்சி விருந்தாக உள்ளது. இசை உள்ளக் கிளர்ச்சியை ஊட்டும் நுட்பம் வாய்ந்தது; அதுவும், புதிது புதிதாக எழுப்பப்படும் இனிய தண்ணிசை நெஞ்சிற் றண்மையை எழுப்பி இன்பூட்டுவது. அதனை உவமைப்படுத்தி உரைத்தது தலைவியின் நுட்பமதியை நுவலுதற்கே.

அஞ்சியின் புகழ் இனிமை:

இப் பாடலை இயற்றிய கவிஞர்க்கு அதியமான் அஞ்சியின் பெரும்புகழில் ஒரு தனித்த ஈடுபாடு இருந்திருத்தல் வேண்டும். இப் பகுதியால் அஃது இனிது புலப்படுகின்றது. விரைந்த செலவினையுடைய புரவி பூட்டப்பட்ட கடிதாக ஓடும் தேரை உடையான் என்று கூறுவதுடன், அவனது புகழை 'நல்லிசை' என்று குறித்தது நோக்கத்தக்கது. அவனைப் பற்றிப் பாணன் ஒருவன் புனைந்த தொல்லிசைப் பண்ணும் திறமும் கவிஞன்

நெஞ்சைத் தொட்டிருக்க வேண்டும். அதற்கு ஒரு வடிகால் வேண்டாமா? தலைவனின் இனிமைக்குத் தன்னுடைய வாழ்வில் உணர்ந்த அந்த உண்மையை உணர்ச்சியுடன் இணைத்த திறம் வியத்தற்குரியதாக உள்ளது. இடைப் பிறவரலாக எண்ணிவிடாதபடி இயல்பாக அதனை இணைத்த திறத்தை எண்ணுந்தோறும் இன்பம் எழுகின்றது.

நன்றி யுணர்ச்சி :

இப்போது தலைவனைப் பற்றி முன்னர்த் தோழி உரைத்த விளக்கங்கள் அனைத்தும் எவ்வாறு மெய்யாயின என்று மன மாரப் புகழ்கின்றாள் தலைவி. 'உயர் குடிப்பிறப்பு உடையவன்' என்றும், 'தன்னுடன் கூடுகின்றவரைப் பிரியாது உறையும் பேரருளாளன்' என்றும், 'நாவால் கெடுமொழிகள் ஏதும் புகலாத நல்லோன்' என்றும், 'அன்பின் திறத்தினன்' என்றும் தோழி வல்லாங்குக் கூறி அவ்வுயர் பண்புகளுக்கு உறைவிட மாகிய நல்லோனைத் தன் வாழ்வில் இணைத்துவைத்த அருமைப்பாட்டை எண்ணி மகிழும் தலைவி, வாய்விட்டுப் பாராட்டி மகிழ்கின்றாள் மேலும் :

"குடிநன் குடையன்; கூடுநர்ப் பிரியலன்;
கெடுநா மொழியலன்; அன்பினன் எனநீ
வல்லகூறி வாய்வதிற் புணர்த்தோய்"

அளவற்ற நன்றி யுணர்ச்சி ததும்ப இச்சொற்கள் மலர் கின்றமை வெளிப்படை; தோழியின் அறிமுகவுரை அநு பவத்தில் மெய்யாகி மிளிர்கின்றமையே இவ் வாய்மொழிக்கு வித்து.

சுற்றம் தழுவிடும் மனையற மாட்சி :

தலைவனைச் சுட்டிக் கூறும் பகுதி தலைவியின் கூரிய, விழுமிய அறிவுநலத்தின் மாட்சியை விளக்குவதாக அமை கின்றது; ஆம்; அம் மாட்சி பொதுளிய பகுதியாலேயே கவிதையின் முதற்பகுதியைப் புனைந்து, உணர்ச்சியை உண்மையுடன் கூட்டி ஓர் ஓவியப் பாட்டை உருவாக்கி விட்டான் கவிஞன்.

அது மலைநாடு; தலைவன் வாழும் மலைப்பகுதியிலே ஒரு காட்சி. விளைந்த பலாமரம் ஒன்றிலே ஆண் குரங்கு ஒன்று ஏறிக் குடம் போன்ற பலாப்பழம் ஒன்றைப் பறித்தது; அருவி ஒலித்து வீழும் கற்பாறைக்கு முன்பு அப் பழத்தைத் தன்ன கத்தே பொருந்தத் தழுவிக்கொண்டு தின்றது அக் குரங்கு.

இயல்பாக அதன் முன்னே ஆடுகின்ற அழகு மயில் ஒன்று நின்று தோகை விரித்து ஆடிக் கலைநலம் துலக்கியது. அப்போது அக் குரங்கு தன் துணைவியை ஒலி செய்து கூப்பிடலாயிற்று. இக் காட்சி எதனை நினைப்பூட்டுகின்றது? பழமையான ஊர்களில் கூத்தாடுகின்ற கலைஞர்கள் விழாக் கொண்டாடுவர்; அப்போது அழகான ஆடல் விறலி ஒருத்தியின் பின்புறத்தே நிற்கக் கூடிய முழவனை—முழவு வாசிப்போனை அக் குரங்கு நினைப்பூட்டுகின்றது என்கின்றாள் தலைவி. எவ்வளவு இயல்பான உவமை? அழகிய விறலியின் பின் நின்று முழவைத் தழுவிக்கொண்டு வாசிக்கக் கூடிய கலைஞனைப் போன்று, பலாப்பழம் ஒன்றைத் தன்னகத்தே கொண்டு தழுவி மயிலொன்றின் முன்னே நின்ற அக் கடுவன் தோன்றியமையை ஓர் இனிய படம் போல எழுதி, அக்குன்றத்திற்கு உரியவன் தலைவன் என்று குறித்தது ஓர் உள்ளுறை தழுவியதாகவே இருத்தல் வேண்டும். அதன் அடிக் கருத்து யாது?

பல்கிளைத் தலைவனாகிய கடுவன் பலாப்பழத்தைத் தழுவியபடி துணையை அழைக்கும் நிலை, பல் சுற்றத்தாரையும் பேணித் தலைவியாகிய தன்பால் மிக்க காதலுடையவனாக இருக்கும் நிலையைக் குறிப்பாகச் சுட்டுமாறு உள்ளமை உணர்ந்து மகிழத் தக்கது. இந்த உள்ளுறையுவமை பாட்டின் நுண் பொருளுக்கு மேலும் பொலிவூட்டுவதாக உள்ளது. இவ்வருங்கருத்துகள் அனைத்தும் பொதுளிய சீரிய நெடுந்தொகைக் கவிதையின் அழகுறு வடிவம் இது:

“முடவுமுதிர் பலவின் குடமருள் பெரும்பழம்
பல்கிளைத் தலைவன் கல்லாக் கடுவன்
பாடிமிழ் அருவிப் பாறை மருங்கின்
ஆடுமயில் முன்ன தாகக் கோடியர்
விழவுகொள் மூதூர் விறலி பின்றை
முழவன் போல அகப்படத் தழீஇ
இன்றுணைப் பயிருங் குன்ற நாடன்
குடிநன் குடையன் கூடுநர்ப் பிரியலன்
கெடுநா மொழியலன் அன்பினன் எனநீ
வல்ல கூறி வாய்வதிற் புணர்த்தோய்
நல்லை காணில் காதலந் தோழி
கடும்பரிப் புரவி நெடுந்தேர் அஞ்சி
நல்லிசை நிறுத்த நயவரு பனுவல்
தொல்லிசை நிறீஇய வுரைசால் பாண்மகன்
எண்ணுமுறை நிறுத்த பண்ணி னுள்ளும்
புதுவது புனைந்த திறத்தினும்
வதுவை நாளினும் இனியனால் எமக்கே”

(அகம் - நித்திலக்கோவை-352;)

உண்மையும் உணர்ச்சியும் கவிதையாதல் :

உண்மையை உரைக்க முற்படும் பாவலன், உணர்ச்சியோடு இணைத்து அதனை ஓதிய திறம் உன்னுதற்கு இனியது. வெறும் உண்மையை, இல்லற இன்ப நிலையைச் சொல்லுவதாக மட்டும் இப் பாட்டு இருந்திருக்குமாயின் அழியா இயல்பு பெற்றதாக இருக்காது. அதனை உணர்ச்சி ததும்ப வெளியிடும் திறத்தாலேயே இமயத்தைப் போன்ற இலக்கியப் பண்பினை ஏற்று, நித்திலக்கோவையுட் கோத்த ஒரு நித்திலமாய் நிலைத்து விட்டது.

மறைமலையடிகள் நூல்நிலைய வளர்ச்சிக்கு நன்கொடை

1976 டிசம்பர் திங்களுக்குக் கழக ஆட்சியாளர் நன்கொடை	ரூ. *100—00*
கழகச் செயற்குழு உறுப்பினர் திரு. சுந்தரம்பிள்ளை பி.ஏ.பி.எல். நன்கொடை	*25—00*

பிறந்த நாள் நன்கொடை

கழகப் பொது மேலாளர் திரு. இரா. கலியாணசுந்தரம் *(11-11-76)*	*5—00*
மறைமலையடிகள் நூல்நிலையம் நூலகர் திரு. முத்துக்குமாரசுவாமி *(10-12-76)*	*5—00*
கழகப் பொது மேலாளர் மகள் செல்வி சுப்புலட்சுமி என்ற சிவகாமி *(7-1-77)*	*5—00*
கழகப் பொது மேலாளர் மகள் செல்வி மங்கையர்க்கரசி *(30-12-76)*	*5—00*
மறைமலையடிகள் நூல்நிலைய நூலகர் மகன் செல்வன் சுப்பையா *(10-1-77)*	*5—00*

இம் முறையில் தமிழ்ப் புலவர்களும், விரிவுரையாளர்களும், பேராசிரியர்களும், மற்றும் தமிழ் அன்பர்களும் தங்கள் இல்லத்தார் பிறந்த நாட்களிலும் திருமண விழாக்களிலும் மறைமலையடிகள் நூல்நிலைய வளர்ச்சிக்கு நன்கொடை வழங்குதல் வேண்டுமென்பதே கழக ஆட்சியாளரின் விருப்பமும் வேண்டுதலுமாகும்.

பாராட்டும் நன்கொடையும்

சென்னை ஒ. ப. சி. நண்பர்கள் கழகம் 7ஆவது ஆண்டு விழாவில் இந்தியன் ஓவர்சீசு பாங்கு பொது மேலாளராகப் பணியாற்றி ஓய்வு பெற்ற இராவ் சாகிப் திரு. எஸ். ஆர். வி. அரசு அவர்களுக்கும், மற்றும் உயிர்க்காப்பீட்டுக் கழகத்தைச் சார்ந்த திரு. பெ. சண்முகம் பிள்ளை, நேஷனல் திரைப்படக் குழுமத்தைச் சார்ந்த திரு. பி. எஸ். எஸ். மணி ஆகியோருக்கும் பொன்னாடை போர்த்திச் சிறப்பிக்கப்பட்டது. அவ் விழாவின் நினைவாக மறைமலையடிகள் நூல்நிலைய வளர்ச்சிக்கு ரூபா 5 ஐந்து) மட்டும் வழங்கப்பட்டது மகிழ்ச்சிக்குரியதாகும்.

ஏனைய கழகங்களும் இதனைப் பின்பற்றுதல் நலம் பயக்கும்.

வண்ணங்கள் வளர்ந்த வகை

மொழியியற் கட்டுரை

[மு. வை. அரவிந்தன், எம். ஓ. எல்.]

தமிழில் வண்ணங்களைக் குறிக்க,

வெள்ளை, கறுப்பு, பச்சை, சிவப்பு, மஞ்சள், நீலம் ஆகிய சொற்கள் உள்ளன. இந்த ஆறுசொற்களுள், முதல் நான்கு நிறங்களைக் குறிக்கின்ற சொற்களோடு தொடர்புடைய பலவேறு வடிவங்கள் உள்ளன:

வெள்ளை : வெண்மை
வெள் வெள்ளி, வெள்ளிடை
வெளி, வெளிர், வெளிறு, வெளிப்படை, வெளிப்படு
வெளுப்பு, வெளுத்த
வெள்ளென—வெள்ளை வெளேரென

கறுப்பு : கருமை,
கரு, கருக்கல் (இருட்டு) கருக்கம் (மேகம் - தேவா. 884.8.) கருத்த, கருகிய.
கரி, கரிய, கரிந்த, கரியன்.
கார், காரி (கருநிறக்காளை, குதிரை, ஒரு வள்ளல், சனிக்கோள்).
கருகருவென்று, கன்னங்கரிய, கன்னங்கரேலென

பச்சை: பசுமை
பசு, பசிய, பை
பசலை, பசப்பு, பசந்த, ப(ச்சிலை)
பாசி, பாசினம் (கிளிகள்)
பச்சைப்பசேலென - பச்சென்று.

சிவப்பு : செம்மை
செவ்வை, செவ்வி (செவப்பு = சிவப்பு)
சிவந்த (செவந்த = சிவந்த)
செம், செம்மல், செம்மாப்பு, செம்மாந்து - செம்பு
செவலை செகில் (செந்நிறக்காளை)

செச்சை சிவந்த (வெட்சிப்பூ - முருகு - 208)
செந்துளசி - மலைபடு......)
செக்கர் - செவ்வானம் (புற-16).
செக்கச் செவேலென, செக்கச் சிவந்த
சேயொளி சேயிழை சேயோன்
சேய், செய்யவள், சிவம், சிவன்

இவையே யன்றி, வெண்மை நிறத்தைக் குறிக்க, 'வால்' என்ற சொல், சங்க நூல்களில் உள்ளது. வாலிமை, வாலிய, வாலியோன் முதலிய சொற்கள் 'வால்' என்பதிலிருந்து தோன்றியுள்ளன.

கறுப்பு நிறத்தைக் குறிக்க மா, மாமை, மை, மைப்பு (மப்பு) ஆகிய சொற்களும் உள்ளன. மால் மாயோன் மாயோள் ஆகிய சொற்கள் மா என்பதோடு தொடர்புடையவை.

இத்தகைய பலவேறு சொல்வடிவங்கள், மஞ்சள் நீலம் ஆகிய இரண்டு நிறங்களுக்கு இல்லை.

மஞ்சள் :

பழந்தமிழ் நூல்களில் மஞ்சள் என்ற சொல் மஞ்சள் நிறத்தைக் குறிக்காமல், மஞ்சள் கிழங்கையோ, மஞ்சள் செடியையோ குறிக்கின்றது:

"மஞ்சள் மெல்லிலை" —சிறுபாண். 44
"மஞ்சள் முன்றில் மணநாறு படப்பை" —பெரும். 354
"இஞ்சி மஞ்சள் பைங்கறி பிறவும்" மதுரைக். 289
"காய்க் கமுகின் கமழ் மஞ்சள்" —பட். 17
"சேம்பும் மஞ்சளும்" மலை. 434

முற்காலத்தில் கிழங்கைக் குறிக்கப் பயன்பட்ட மஞ்சள் என்னும் சொல், மெல்ல மெல்ல (ஆகுபெயராகி), பிற்காலத்தில் அதன் நிறத்தையும் குறித்தது. மஞ்சள், இந்த மாறுதலை அடைவதற்கு முன்னால், மஞ்சளைக் குறிக்கப் 'பசுமை' என்ற சொல்லே பயன்பட்டு வந்தது.

மஞ்சள் - பசுமை :

பொன் என்னும் சொல் உலோகத்தைக் குறிக்கும் பொதுச் சொல்லாக இருந்த காலத்தில்,

சிவந்த நிறமுடைய செம்பு,
செம்மை+பொன் செம்பொன்
கருமை+பொன் கரும்பொன்

எனப்பட்டது. ஆனால், மஞ்சள் நிறமுடைய தங்கம், பசுமை என்ற சொல்லுடன் சேர்ந்து,

பசுமை+பொன் பசும்பொன்

என்று ஆனது.

பொன்னால் ஆகிய அணி, பசும்பூண் என்று கூறப்பட்டது.

"பசும்பூண் பாண்டியன்" —குறுந். 393
"பசும்பூண் மார்ப" —பதிற். 17
"பசும் பொற் படலத்து" —பதிற். 39
"பசும் பொன்" —பதிற். 16

பிரிவால் வருந்தும் தலைவியின் மேனியில் ஏற்படும் நிற மாற்றத்தைச் சங்க நூல்கள் 'பசலை' என்ற சொல்லால் குறிப் பிடுகின்றன. பசலை, மஞ்சள் நிறமானது. பசலைக்குப் பொன்னும் பீர்க்கம்பூவும் கொன்றை மலரும் உவமைகளாகக் கூறப்பட்டுள்ளன.

பசலை, பசப்பு, பசந்த, பசத்தல், பசந்தனள்

முதலிய சொற்கள் பசுமை என்ற சொல்லுடன் தொடர் புடையவை. இவற்றிற்குப் பசுமை என்பதே வேர்ச்சொல் லாகும். முற்காலத்தவர், மஞ்சள் நிறத்தைப் பசுமையிலிருந்து வேறுபடுத்திக் காணவில்லை என்பதைப் பசலையும் அதனோடு தொடர்புடைய சொற்களும் உணர்த்துகின்றன.

நீலம் :

'நீலம்' முற்காலத்தில் நீல மலரையும், நீல மணியையும் குறிக்கப் பயன்பட்டது :

நீலத் தன்ன அகவிலைச் சேம்பின்—அக—178. பின்னரே அச் சொல், நிறத்தைக் குறித்தது.

தேன் முதிர்வதால் தோன்றும் நீல நிறத்தை ஓரி என்று பழந்தமிழ்ப் புலவர்கள் கூறியுள்ளனர் :

"நீல் நெய் தாழ் கோதை" —பரி. 11 : 124.

(நீல நிறத்தையுடைய தேன்நெய் தங்கிய கோதை —பரி. உரை)

"நீல் நிற ஓரி பாய்ந்தென நெடுவரை
நேமியிற் செல்லும் நெய்க்கண் இருஅல்" —மலை-524, 525.

"அணிநிற ஓரி பாய்தலின் மீதழிந்து
திணிநெடுங்குன்றம் தேன்சொரி யும்மே" —புறம். 109.

(ஓரி—தேன் முதிர்ந்ததால் பரக்கும் நீல நிறம். பழையவுரை.)

நீலம், நீல் என்று வழங்கப்பட்டுள்ளது.

நீல நிறத்தைத் தனியாக வேறுபடுத்திச் சுட்டுவதற்கு முன்னர், அந் நிறத்தைப் பசுமை என்றே வழங்கியுள்ளனர். சேம்பினுடைய பச்சை இலையை, 'நீலமணி போன்ற அகன்ற இலை'

"நீலத் தன்ன அகலிலைச் சேம்பின்" —அகம். 178.

என்று குறிப்பிடுகின்றார் பரணர். நீல நிறமான குவளை மலரை.

'பச்சைக்குவளை" —பரி. 11, 101, 102.

என்று குறிக்கின்றது பரிபாடல். மயிலை, நீலப்பறவை என்கிறது சிலப்பதிகாரம் (சிலப். 24-15). 'நீலம்' என்று மாங்காயில் ஒருவகை யுள்ளது.

நீலம்—கருமை :

கரு நிறத்தை நீலம் என்று குறிப்பிடும் வழக்கம் உள்ளது:

கருங்குயில்—நீலக்குயில்; கருங்கடல்—நீலக்கடல்; கருமேகம்—நீலமேகம்.

கருநாகத்தை 'நீல நாகம்' என்று பெருங்கதையும் (பெருங். இலாவாண. 15, 142), கார் நெல்லை 'நீலநெல்' என்று பெரிய புராணமும் (அரிவாட். 10) குறிப்பிடுகின்றன.

கண்ணுக்கு இடுகின்ற மையைக் கரி என்று சிந்தாமணியும் (626), நீலம் என்று அருட்பாவும் (கருணை பெருதிரங்கல். 11) வழங்கியுள்ளன.

ஆலமுண்ட நீலகண்டனை, 'காரியுண்டிக் கடவுள்' என்று மலைபடுகடாம் (83) குறிப்பிடுகின்றது. 'காரி' என்பது, பொதுவாகக் கருமையைக் குறித்தாலும், இங்கே அது, நீல நிறமுடைய நஞ்சைக் குறிக்கின்றது.

சங்க காலத்து வள்ளல்களுள் ஒருவன் பெயர் காரி. அச்சொல் கரிய நிறமுடைய குதிரையையும் காளையையும் குறிக்கும். கரிக் குருவியும் 'காரி' என்று வழங்கப்பட்டுள்ளது. சனிக் கோளும் இச் சொல்லால் குறிக்கப்படும்.

கருமை—பசுமை—நீலம் :

கருமை பசுமை நீலம் ஆகிய மூன்று நிறங்களையும் வேறுபாடு இன்றி வழங்கும் இடங்கள் சில உள்ளன. கருமுகிலைப் 'பச்சைப் பசுங்கொண்டல்' என்கிறார் குமரகுருபரர். பசிய கரும்பைக் 'கார்க் கரும்பு' என்கிறது பட்டினப்பாலை. வைணவ அடியார்கள் கண்ணனைப் பச்சை வண்ணனாய் - நீலமேக நிறத்தவனாய் - கார்முகில் மேனியனாய்ப் போற்றுகின்றனர். காமனைப் பச்சை நிறத்தவன் என்று கூறுகின்றது பரிபாடல். காளி தேவியை, நீலி, பச்சையம்மாள், மாயோள், கரியவள் என்று குறிப்பிடுகின்றனர்.

இத்தகைய சொல்வழக்குகள், கருமையிலிருந்து, பச்சை, நீலம் ஆகிய இருவேறு நிறங்களையும் வேறுபடுத்திக் காணாத நிலைமை இருந்ததைப் புலப்படுத்துகின்றன.

நிறத்தைக் குறிக்கின்ற சொற்களின் இயல்பை நோக்கி, தமிழில் வண்ணங்கள் வளர்ந்த வகையைப் பின்வருமாறு வரிசைப்படுத்தலாம் :

1. வெள்ளை 2. கறுப்பு 3. சிவப்பு

4. பச்சை

5. மஞ்சள் 6. நீலம்

இவற்றைக் கொண்டு, வெள்ளை கறுப்பு சிவப்பு ஆகிய மூன்று நிறங்களே முதலில் வேறுபடுத்தி அறியப்பட்டிருந்தன என்றும், பின்னர்க் கறுப்பிலிருந்து பச்சையும், பச்சையிலிருந்து நீலமும் மஞ்சளும் வேறுபாடு அறிந்து பிரிக்கப்பட்டன என்றும் உணரலாம்.

வெள்ளை கறுப்பு சிவப்பு பச்சை மஞ்சள் ஆகிய நிறங்கள் ஐந்தும் 'பஞ்சவர்ணம்' எனப்படும் (தமிழ்லெக்சிகன்-பக். 2411). பஞ்சவர்ணங்களில் 'நீலம்' இடம்பெறவில்லை.

வண்ணங்களின் வகையை விரிவாக நுண்ணிய வேறுபாட்டுடன் அறிந்து குறிப்பிடவேண்டி இருந்தபோது, பல புதிய முறையில் சொல்லாக்கங்கள் தோன்றின. வெள்ளையின் பல நிலைகளைக் குறிக்க,

பால் வெள்ளை, கொக்கு வெள்ளை, சங்கு வெள்ளை, முத்து வெள்ளை.

என்ற தொடர்கள் தோன்றின. சிவப்பு நிறம், கருஞ் சிவப்பு, இரத்தச் சிவப்பு என்று வேறுபடுத்தப்பட்டது. பச்சை வண்ணம், இலைப்பச்சை, கிளிப்பச்சை என்று பிரித்துச் சுட்டப் பட்டது. அடர்த்தியான நீலத்தைக் 'கருநீலம்' என்பர். கரும் பச்சை என்ற வழக்கும் உள்ளது.

சில பொருள்களின் நிறத்திற்குத் தனியே பெயர் இடமுடி யாத நிலையில்,

பழுப்பு நிறம், சாம்பல் நிறம், மாநிறம், கத்தரிப்பூ நிறம். என்று குறிக்கும் வழக்கம் ஏற்பட்டது. கத்தரிப்பூவின் நிறத்தை ஊதா என்றும் குறிப்பிடுவர்.

34ஆவது தமிழிசை விழா

தமிழ் இசைச் சங்கத்தின் 34 ஆவது விழா 22-12-76இல் சென்னை இராசா அண்ணாமலை மன்றத்தில் துவங்கிற்று. தமிழக ஆளுநர் மோகன்லால் சுகாதியா விழாவைத் துவக்கி வைத்தார். விழாவுக்குத் தலைமை தாங்கிய மாயூரம் வி. ஆர். கோவிந்தராச பிள்ளை அவர் களுக்கு 'இசைப் பேறிஞர்' என்னும் பட்டம் வழங்கிப் பொற்பதக்க மும் சான்றிதழும் அளிக்கப்பெற்றன.

விழாவைத் துவக்கி வைத்த ஆளுநர் அவர்கள், தமது உரையில் பல்வேறுபட்ட பண்பாடுகளை இணைக்கும் கயிறாக இசை விளங்குகிறது. என்றும், இசைவாணர்கள் நாடு முழுமைக்கும் உரியவர்கள் என்றும் குறிப்பிட்டார்.

திரு. கோவிந்தராச பிள்ளை தமது தலைமை உரையில் தமிழ் இலக் கியங்களில் இசைக்கலையின் ஏற்றம் கூறப்படுகிறது என்றும், ஞான சம்பந்தர் தமிழோடு இசையினைப் பரப்பினார் என்றும், அதனால் தமிழிசை பண்ணிசையாகக் கோயில்களிலும் மடங்களிலும் காப்பாற் றப்பட்டு வருகிறது என்றும், இசைத் தொண்டர்களும், வள்ளல் களும், பொது மக்களும் ஒத்துழைத்து இசைத் துறையிலும், நாடகத் துறையிலும், நாட்டியத் துறையிலும் சங்ககால வாழ்வைக் காண வேண்டு மென்றும் கேட்டுக் கொண்டார். தமிழிசைச் சங்கத் தலைவர் திரு. டி. எம். நாராயணசாமிப் பிள்ளை அனைவரையும் வரவேற்றார். அவர் தம் வரவேற்புரையில் அடுத்த ஆண்டு செப்டம்பர்த் திங்களில் தேசிய இந்துஸ்தானி இசைவிழா நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது என்று கூறினார். 23-12-76 முதல் நான்கு நாட்கள் காலையிலும் பண் ஆராய்ச்சிக் கூட்டம் நடைபெற்றது. தமிழிசை வளர்ச்சிக்கு ஒல்லும் வகையில் 34 ஆண்டுகளாகத் தொண்டாற்றி வரும் டாக்டர் இராசா. சர். முத்தைய செட்டியாரவர்கட்கும் அவர்கள் இளவல் சிதம்பரஞ் செட்டியாரவர்கட்கும் இசையுலகு மிக்க நன்றி செலுத்துங் கடப்பாடுடையது.

கடமையில் இருந்து உரிமை

(அடிப்படைக் கடமைகள்—Fundamental duties)

[கவிஞர் புத்தனேரி ரா. சுப்பிரமணியம்]

அடிப்படை உரிமை எல்லாம்
அனுபவித் திடவே என்றும்
துடிப்புடைத் தோழா! நீதான்
தூயநல் வாழ்வு காண
அடிப்படைக் கடமை எல்லாம்
அறிந்துநீ புரிந்தால் தானே
பிடிப்புடைச் சமுதா யத்தின்
பெருமையைக் காப்ப தாகும்?

இயற்கையின் நியதி போலே
ஏனைய உயிர்கள் கூடத்
தயக்கமே சிறிதும் இன்றித்
தம்கடன் ஆற்றக் காண்போம்;
வியக்கிறோம் மனிதப் பண்பை!
விருப்புடன் கடமை தன்னை
இயக்கிடத் தவறும் கூட்டம்
என்றுதான் திருந்தும் அம்மா!

அவரவர் கடமை தன்னை
ஆற்றிடத் தவறு வாரேல்
எவருமே உரிமை கோரி
ஏற்றிடத் தகுதி இல்லை;
*இவைகளே நாண யத்தின்
இருபுற மாக எண்ணிக்
கவனமாய்க் காப்போன் அன்றோ
கருமமே கண்ணாய் நிற்போன்.

கடமை 1

அருமைநம் பார தத்தின்
அரசியல் சாசனத் தைப்
பெருமதிப் போடு பேணிப்
பீடுயர் நமது நாட்டின்
பெருமிதக் கொடியைக் காத்துப்
பெற்றதாய் நாட்டுப் பண்ணை
ஒருமுகக் குரலில் பாடல்
உயிர் முதற் கடமை யாகும்.

கடமை 2

அந்நிய ஆதிக் கத்தை
அகற்றிட—காந்தி அண்ணல்
முன்னணி அறப்போர் தன்னை
மூட்டிய குறிக்கோள் எல்லாம்
இன்னமும் வாடா வண்ணம்
இந்திய மரபைக் காத்தல்
இன்னுயிர்க் கடமை யாக
இந்தியன் ஏற்க வேண்டும்.

கடமை 3

குமரிசே வடியைத் தொட்டும்
இமயமா முடியை எட்டும்
நமதுபா ரதத்தின் கீர்த்தி
நாட்டிய சுதந்தி ரத்தை
இமையெனக் காத்து மக்கள்
இணக்கமும் இருமைப் பாடும்
கமழ்தரும் உயிர்மூச் சாகக்
காப்பதும் கடமை யாகும்.

கடமை 4

புவனமே போற்றும் கீர்த்திப்
பொலிவுடை நமது மண்ணைக்
கவரவும் வேற்று நாட்டார்
கழுகெனத் திரியக் கண்டால்
எவரையும் வெற்றி கொள்ளும்
இந்தியப் பாது காப்பே
கவனமாய்த் துணிந்து நிற்றல்
மக்களின் கடமை யாகும்.

கடமை 5

இனம்மதம் மொழி வட்டாரம்
இத்தகு பேதம் இன்றி
அனைவரும் உடன் பிறப்பின்
ஐக்கிய உணர்ச்சி யோடு

*(கடமை உரிமை ஆகிய இவைகள்)

மனைவிளக் கான பெண்ணின்
மகிமையைப் பேணிக் காக்க
முனைவுறும் புதிய நோக்கும்
முக்கிய கடமை யாகும்.

மாயமும் அச்சம் ஊட்டும்
வன்முறை அனைத்தும் மாய்த்துத்
தூயநம் நாட்டைக் காக்கத்
துணைசெயல் கடமை யாகும்.

கடமை 6

பாரெலாம் வியந்து போற்றும்
பழைமையின் சிகர மான
பாரதப் பண்பாட் டின்கண்
பற்றுடன் அதைப்பின் பற்றும்
சீரெலாம் செழிக்க மக்கள்
சிந்தையின் உயர்வு காணக்
காரண மாக நிற்கும்
கடமையும் காக்க வேண்டும்.

கடமை 7

மாநதி ஏரி யெல்லாம்
வறண்டிடா வண்ணம் காத்தல்
கானகம் விலங்குக் கூட்டம்
கவினெலாம் கெடாது காத்தல்
ஏனைய உயிர்கள் மீதும்
இரக்கமாய் அன்பு சேர்த்தல்
ஆனநல் அறமும் பேணல்
அனைவரின் கடமை யாகும்.

கடமை 8

அறிவியல் சீர் திருத்தம்
ஆய்வுகள் இவற்றி லெல்லாம்
செறிவுடன் ஈடு பாடும்
பாரதப் பெருமை பாடும்
நெறியுடன் மனிதர் எல்லாம்
நேயமாய் உழுவல் அன்புச்
செறிவுடன் வாழ்ந்து காட்டல்
சிறந்ததோர் கடமை யன்றோ!

கடமை 9

நாயகப் பொருளை எல்லாம்
தன்பொரு ளாகக் காத்துத்
தீயவை எல்லாம் நீக்கிச்
சிறமதி யுடையோர் செய்யும்

கடமை 10

எத்தனை துறைகள் உண்டோ
அத்தனை துறைகள் தோறும்
இத்திரு நாட்டின் ஏற்றம்
எய்திட வேண்டும் என்ற
தத்துவம் குறிக்கோ ளாகிச்
சாதனை வெற்றி காண
நித்தியம் உழைக்கும் ஆற்றல்
நிகரிலாக் கடமை யாகும்.

அரசியல் சாசனத்தில்
அமைந்தநற் கடமை பத்தும்
பரிசெனக் கருதி மக்கள்
பற்றுடன் காக்க வேண்டும்;
அரசினைப் போற்ற வேண்டும்;
அராசகம் தலைகாட் டாமல்
கரிசன மாக நாட்டைக்
காப்பதே கடமை யாகும்.

உரிமையில் தவறு செய்யும்
ஒருவனும், மாற்றான் கொண்ட
உரிமையைப் பறிக்க முந்தும்
ஒருவனும், சாதி பேத
வெறியினைத் தூண்டும் பொல்லா
வீணனும் கடமை கொன்ற
தறுதலை. துரோகி என்ற
தாழ்நிலைப் படுதல் திண்ணம்!

கோதிலாக் கடமை பத்தும்
குடிமகன் காத்து நின்றால்
சாதிபே தங்கள் இல்லாச்
சமத்துவம் மலர்ச்சி காட்டும்;
நீதிலாச் சமுதா யத்தின்
சிறப்பினை நாடு காணும்
மேதினி பாரதத்தின்
மேன்மையை வியக்கு மன்றோ!

திரு. க. ப. அறவாணனரின் ஆப்பிரிக்கச் செலவு

சிறந்த தமிழறிஞரும் ஆராய்ச்சி வேட்கையுடையவரும் ஆகிய திரு. க. ப. அறவாணன், எம்.ஏ., எம்.லிட் அவர்கள் மேற்கு ஆப்பிரிக்காவி லுள்ள செனகல் நாட்டிற்கு 3-1-77 அன்று மீனம்பாக்கத்திலிருந்து வானூர்தி வழிப் பயணமானர். சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் தமிழ்த்துறையில் உதவிப் பேராசிரியராகப் பணியாற்றிவரும் திரு. அறவாணன், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பி. ஒ. எல் பட்டம் பெற்றார். கேரளப் பல்கலைக் கழகத்தில் டாக்டர் வி. ஐ. சுப்பிரமணியம், டாக்டர் ச. வே. சுப்பிரமணியம் ஆகிய இருபெரும் பேராசிரியர் களிடமும் பயின்று தமிழில் எம். ஏ. பட்டம் பெற்றார்.



பாளையங்கோட்டை செயிண்ட் சேவியர் கல்லூரியிலும், பாபநாசம் தமிழ்க் கல்லூரி யிலும் பணியாற்றிவிட்டுச் சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் பணியாற்ற வந்தார்.

இடைவிடாது நூல்கள் கற்பதில் ஆர்வமுள்ள இவர் சிறந்த நூல் களைப் படைப்பதிலும் வல்லவர். கதை, கவிதை, ஆராய்ச்சி, வரலாறு, கல்வெட்டு, மொழியியல் போன்ற பல துறைகளிலும் நாட்டம் கொண் டவர். இருபத்தைந்து நூல்களுக்கு மேம்பட்ட இவர்தம் படைப்புக் களில் குறிப்பிடத்தக்கவை தொல்காப்பியக் களஞ்சியம், தொல்காப்பிய ஒப்பியல், சைனரின் தமிழிலக்கண நன்கொடை, இலக்கிய ஒப்பாய்வு, கவிதையின் உயிர் உள்ளம் உடல், எழுநூறு ஆண்டுகளில் நன்னூல்-போன்றவையாம்.

பச்சையப்பன் கல்லூரிப் பெரும் பேராசிரியர், அ. மு. பரமசிவா னந்தம், எம்,ஏ., எம்.லிட். அவர்களிடம் 'நன்னூல்' பற்றி ஆய்வுசெய்து எம்.லிட். பட்டம் பெற்றார். அதன்பின் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியரும் அத் துறைத் தலைவரும் ஆய்வுப் பேரறிஞருமான டாக்டர் ந. சஞ்சீவி அவர்களிடம் 'தொல்காப்பிய உரைகள் ஒப்பாய்வு' பற்றி ஆய்ந்து பிஎச்.டி. பட்டமும் பெறவிருக்கிறார்.

இவ்வாறு பல்துறை யாற்றல் படைத்த திரு. அறவாணன் அவர் களின் ஆற்றல் கண்டு மேற்காப்பிரிக்க நாடுகளுள் ஒன்றான செனகல் நாட்டுக் குடியரசுத் தலைவர் லியபோல்ட் செங்கோர் அவர்கள் அந் நாட் டிற்கு அழைத்துள்ளார்கள். அந் நாட்டின் தலைநகரான டாகர் நகரில் டாகர் பல்கலைக் கழகத்தில் அந் நாட்டு மொழியான 'ஒல்ப்' மொழிக்கும் தமிழ் மொழிக்குமுள்ள ஒற்றுமை வேற்றுமைகளை ஆராய்வதற்காக இவர் சென்றுள்ளார். அத்துடன் அந்நாட்டு மக்களுக்கும் தமிழ்நாட்டு மக்களுக்குமுள்ள பழக்கவழக்கங்களையும், பண்பாடுகளையும் ஒப்பாய்வு செய்வார். ஓராண்டுப் பணியாக இதனை ஏற்றுச் சென்றுள்ள திரு. அறவாணனரின் முயற்சி வாழ்க, வெல்க என வாழ்த்துகிறோம்.

செய்திகளும் குறிப்புகளும்

கல்வெட்டில் திருக்குறள்

அண்மையில் தமிழக அரசின் தொல்பொருள் ஆய்வுத் துறையினர் சென்னை இராயப்பேட்டையில் ஒரு கிணற்றுக் கல்வெட்டைக் கண்டு பிடித்தனர். அதில், திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த எல்லீஸ் என்ற பெருமகன் சென்னை மாநகரில், மக்கள் நலங்கருதி 27 கிணறுகளைத் தோண்டி வைத்திருந்தார் என்றும், அவற்றுக்கு அடிப் படையாகக் குறள் நீதியைக் காட்டியுள்ளார் என்றும் தெரிகிறது. இச் செய்தியைக் குறிக்கும் கல்வெட்டு அழகிய தமிழ்ச் செய்யுளாகவே திகழ் கிறது. 'இருபுனலும்' என்று தொடங்கும் குறள் முழுமையும் அப்படியே அதில் எழுதப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்க செய்தியாகும். இந்தக் கிணறுகள் 1818 ஆம் ஆண்டில் தோண்டப்பட்டன. இவர் அடுத்த ஆண்டில் திண்டுக்கல்லில் உயிர் நீத்தார். இவரது கல்லறையில் திருக் குறளில் இவருக்கு இருந்த ஈடுபாடும், சென்னையில் கிணறு தோண்டிய செய்தியும் குறிக்கப்பட்டிருக்கின்றன.

திருவள்ளுவர் கலைமன்ற ஆண்டு விழா

ஹௌராவில் உள்ள திருவள்ளுவர் கலைமன்ற ஆண்டு விழா 25-12-76 முதல் 1-1-77 முடிய, ஹௌரா தென்னிந்தியர் சங்கக் கட்டி டத்தில் சிறப்பாக நடைபெற்றது. புலவர் கவிஞர் சிதம்பரம் சுவாமி நாதன் இலக்கிய விரிவுரைகள் நிகழ்த்தினர். இவ் விழாவில் கவிரயங்க மும், பட்டிமன்றமும் நடைபெற்றன.

சேனாபதிக் கவுண்டர் மணிவிழா

திருமிகு அ. சேனாபதி அவர்களின் மணிவிழா முறையே 25, 26-12-76இல் தாராபுரம் N. C. P. நகராட்சி உயர்நிலைப் பள்ளியில், நடுவண் அரசின் நிதியமைச்சர் மாண்புமிகு டாக்டர் சி. சுப்பிரமணியம் அவர்கள் தலைமையிலும், மறுநாள் பேரூர் ஆதினம் தவத்திரு சாந்த லிங்க இராமசாமி அடிகளார், தருமை ஆதினப் புலவர் திரு. கு. சுந்தர மூர்த்தி, எம்.ஏ., ஆகியோர் தலைமையிலும் சிறப்பாக நடைபெற்றது. அறிஞர்கள் பலர் பல்வேறு பொருள்கள் பற்றிச் சொற்பொழி வாற்றினர்.

தமிழில் நாடக இலக்கியம்

தில்லிப் பல்கலைக் கழகத்தில் பணியாற்றும் பேராசிரியர்களும் விரிவுரையாளர்களும் ஆண்டுதோறும் ஒன்று அல்லது இரண்டு ஆராய்ச்சி நூல்களைப் படைத்து வெளியிடுவதென முடிவு செய் துள்ளனர். இதன்படி 'தமிழில் நாடக இலக்கியம்' என்னும் ஆராய்ச்சி நூல் அவர்களின் முதலாவது புத்தகமாக 1977 ஆகஸ்ட் அல்லது செப் டம்பர்த் திங்களில் வெளிவரும் என, தில்லிப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறைத் தலைவர் டாக்டர் சாலை இளந்திரையன் அறிவிக்கிறார்.

செங்கற்பட்டு மாவட்ட வரலாற்றுக் கருத்தரங்கு

தமிழ்நாடு அரசு தொல் பொருள் ஆய்வுத்துறை மாவட்டந் தோறும் வரலாற்றுக் கருத்தரங்கும், கண் காட்சியும் நடத்தி வரு கின்றது. அதன் தொடர்பாக 8, 9-1-77 ஆம் நாள்களில் காஞ்சிபுரம் பச்சையப்பன் உயர் நிலைப்பள்ளியில், முறையே திரு. யு. சுப்பிர மணியன் ஐ. ஏ. எஸ், டாக்டர் கே. வி இராமன் ஆகியோர் தலைமையில் இக் கருத்தரங்கினை நடத்திற்று. டாக்டர் இரா. நாகசாமி அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினர். அறிஞர் பலர் கருத்துரை ஆற்றினர்.

சென்னையில் புதிய கலங்கரை விளக்கம்

சென்னை மயிலாப்பூர்க் கடற்கரையில் அனைத்திந்திய வானொலி நிலையத்தின் எதிர்ப்புறம் புதியதொரு கலங்கரை விளக்கம் பெரும் பொருட் செலவில் அழகாகக் கட்டப்பட்டுள்ளது. கடந்த 10-1-77 இல் அதனை இந்திய நடுவண் அரசின் கப்பற் போக்குவரத்துத் துறை அமைச்சர் டாக்டர் ஜி. டி. தில்லான் திறந்து வைத்தார்.

இராசாசி – கல்கி, நினைவு விழா

அரசியல் அறிஞர் இராசாசி, இலக்கிய அறிஞர் கல்கி ஆகிய இரு பெருமக்களின் நினைவு விழா 29-12-76 இல் இராசாசி மண்டபத்தில், பாரதி இளைஞர் சங்கத்தாரால் கொண்டாடப் பெற்றது. ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நடுவர் திரு. என். கிருட்டிணசாமி ரெட்டியார் விழா விற்குத் தலைமை தாங்கினார். திரு. கே. ராமமூர்த்தி வரவேற்புரை நிகழ்த்தினார். திரு. மா. பொ. சி. அவர்கள் சிறப்புரை ஆற்றினார்.

திருப்பெருந்திரு. ஆறுமுக நாவலர் 97ஆவது குருபூசை விழா

யாழ்ப்பாணம் திருப்பெருந்திரு ஆறுமுக நாவலர் அவர்களின் 97 ஆவது குருபூசை விழா 12-12-76 இல் மதுரை தெற்காடி வீதி சைவ சித்தாந்த சபையில், வழக்கறிஞர் திரு. பரமசிவன் அவர்கள் தலைமையில் சிறப்புற நடைபெற்றது. நாவலர் அவர்களின் தொண்டுபற்றி அறிஞர் பலர் உரையாற்றினர்.

அகத்தியர் ஆராதனை விழா

புதுவை அகத்தியர் இல்லத்தின் சார்பில் 9-1-77 இல் திருப்பெருந் திரு பாலயோகி இராமதாஸ் சுவாமிகள் முன்னிலையில், அகத்தியர் இல்லம் தேரையர் சித்தர் அரங்கில் வழிபாட்டுப் பெருவிழா சிறப்புற நடைபெற்றது. அவ்வமயம் வண்ணச்சரபம் தண்டபாணி அடிகள் அருளிய முருகப்பெருமான் பதிகம் என்னும் நூலினை அடிகளின் பெயரர் புலவர் தி. மு. சங்கரலிங்கம் அவர்கள் வெளியிட்டார்கள். விழாவினை யொட்டி மருத்துவக் கருத்தரங்கு ஒன்றும் நடைபெற்றது. மருத்துவ அறிஞர்கள் பலர் உரையாற்றினர்.

புலவர் திரு. பி. சொ. சண்முகம் பிள்ளை மறைவு

புரசை முத்தைய செட்டியார் உயர்நிலைப் பள்ளித் தமிழாசிரிய ராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவரும், மாணவர் மன்றத்தின் முன்னாள் செயலாளரும், புலவர் மன்ற நிறுவனருமான புலவர் திரு. பி. சொ. சண்முகம் பிள்ளை அவர்கள் 29-11-76 இல் காலமானார்கள் என்ற செய்தி யறிந்து பெரிதும் வருந்துகிறோம். திரு. பிள்ளையவர்கள் தமிழ்மொழிப் பற்றும், சிவப் பற்றும் நிரம்ப உடையவர். மறைந்த புலவர் அவர் களின் குடும்பத்தார்க்கு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

———

மதிப்புரை

அபிராமி அந்தாதி—தெளிவுரை

[ஆசிரியர்: கலைமாமணி புத்தனேரி ரா. சுப்பிரமணியம் சென்னை, தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலையம் 41 உசுமான் ரோடு, சென்னை—17]

இடப்பக்கம் மூலம், வலப்பக்கம் தெளிவுரை என்ற முறையில் தெளிவான பதிப்பாக வெளிவந்துள்ள இந்த அபிராமி அந்தாதி இறை யடியார்களுக்குப் பெரிதும் பயன்படக் கூடியது.

மனமாற்றம் (வரலாற்று நாடகம்)

[ஆசிரியர்: மூலக்கதை: கோவி. மணிசேகரன். நாடக ஆசிரியர்: தமிழ்க் குடிமகன், எம்.ஏ. அறிவொளி பதிப்பகம், 338, வடக்கு மாசிவீதி மதுரை-1. விலை ரூ 6-00]

இஃதொரு வரலாற்றுப் புனைவு நாடகம். திரு. கோவி. மணி சேகரன் எழுதிய 'செம்பியன் செல்வி' நாடகமாக்கப்பட்டது. படித் தற்கும் நடித்தற்கும் ஏற்ற சுவையான நாடகம்.

திருமுருகெம்பாவை (உரையுடன்)

[ஆசிரியர்: புலவர் உ. வே. டி. கே. சௌரிராஜன். வெளியிட் டோர் சமயப் பிரசார நிலையம், 7, நாராயணராஜு தெரு, சேலம்-1.]

இப் புத்தகம் சமய வளர்ச்சி கருதி திரு. K. V. S. இராதா கிருட்டின செட்டியார் அவர்களின் நிதி உதவியினால் வெளியிடப் பெற்றதாகும். K. V. S. கபினி செட்டியாரின் பீமரத சாந்தி விழா அன்பளிப்பாக இது வெளியிடப்பட்டுள்ளது. திருப்பாவை, திருவெம் பாவை நூல்களைப் போல் திருமுருகனைப் போற்றி வழிபடுதற்கு உரியது.

அழகாபுரி சுப்பிரமணிய சுவாமி பிள்ளைத்தமிழ்

[ஆசிரியர்: கவிஞர் அடிகள் கு. ஆ. அரங்கநாதனார். ஞான சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் வெளியீடு, சேலம்-636004. விலை ரூ. 2-00]

இது சேலம் அழகாபுரியில் கோயில் கொண்டிலகும் செந்தமிழ்க் கடவுளாம் ஞான சுப்பிரமணிய சுவாமியின்மீது பாடப் பெற்ற பிள்ளைத் தமிழாகும். கடவுள் அருள்பெறப் பிள்ளைத்தமிழ்ப் பாடல்கள் பெரிதும் துணை புரிவனவாகும். அவ்வகையில் இப் பிள்ளைத்தமிழ் முருகக்கடவுளின் புகழை மிக அழகாகக் கூறுகின்றது. பாடல்கள் பத்திச்சுவை ஊட்டுவனவாகவும் சரளமாகவும் அமைந்துள்ளன. இதனைப் படித்துத் துதிப்போர்க்குத் துணை செய்வான் முருகன்.

திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்காக, சென்னை, 2/140, பிரகாசம் சாலை, அப்பர் அச்சகத்தில் திரு. வ. சுப்பையா அவர்களால் அச்சிடப்பெற்றது.
ஆசிரியர்: வ. சுப்பையா.



அன்பர்களுக்கு ஒரு வேண்டுகோள்

இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்ப் புலவர்களுள் தலைசிறந்து விளங்கிய மறைத்திரு மறைமலையடிகளாரின் நூற்றாண்டு விழா, சென்னையில் 28-1-77 இல் சீருஞ் சிறப்புமாக நடைபெற விருக்கிறது. அவ் விழாவினையொட்டி வெளியிடப்பெறும் மலர், அறிஞர் பலரின் அரிய கட்டுரைகளையும் கவிதைகளையும் தாங்கி, கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தளிக்கும் வகையில் வண்ண மலராகத் திகழும். அம் மலரில் தமிழ் அன்பர்களின் நிறுவனங்களுக்காகச் சில பக்கங்கள் ஒதுக்கப் பெற்றுள்ளன எனவே, அன்பர்கள் விரைவில் தங்களுடைய நிறுவன விளம்பரங்களை அனுப்பி வைத்து மலர் சிறக்க உதவுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்

முழுப் பக்கம்: ரூ 120 அரைப்பக்கம் ரூ. 65

சை. சி. நூற்பதிப்புக் கழகம், லிட்.,
1/140, பிரகாசம் சாலை, சென்னை 600 001

பதிவு எண் : M. 4899



அப்பர் அச்சகம், சென்னை-1.